தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

**அவசியம்! ; ஆடுகளுக்கும் கோமாரி நோய் தடுப்பூசி... : கால்நடை வளர்ப்போர் கோரிக்கை**

கரூர்: தமிழகத்தில் கரூர், ஈரோடு, தர்மபுரி, திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் மாடுகளுக்கு மட்டும் கோமாரி தடுப்பூசி போடுவதால், ஆடு வளர்ப்போர் அதிர்ச்சியடைந்துள்ளனர். கால்நடை வளர்ப்போர், கோமாரி நோய் பீதியில் குறைந்த விலைக்கு ஆடுகளை விற்க துவங்கி உள்ளனர். தமிழகத்தில், செப்டம்பர் மாதத்தில், மாடு, எருமை, ஆடு, பன்றி ஆகிய கால்நடைகளை கோமாரி நோய் தாக்குகிறது. கிராமப்புறங்களில் கால்கட்டு, வாய்ச்சப்பை, என நோய் அழைக்கப்படுகிறது. பிக்கோர்னா எனப்படும் மிகச்சிறிய வைரஸ் நச்சுயிரிகளால், இந்நோய் ஏற்படுகிறது. அதிவிரைவில் பரவக்கூடிய நச்சுயிரி, பிளவுபட்ட குளம்புகள் கொண்ட கால்நடைகளை தாக்குகிறது. நோய் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு கடும் காய்ச்சல், வாய், நாக்கு, மடி, காம்பு மற்றும் குளம்புகளுக்கு இடையே கொப்புளங்கள் மற்றும் புண்கள் காணப்படும். கால்நடைகளின் உமிழ்நீர், சிறுநீர், பால், சாணம் மற்றும் உபயோகப்படுத்திய தண்ணீர் மற்றும் தீவனதொட்டிகள், தீவனம், காற்று மூலம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நோய் பரவுகின்றன. நோய் தாக்குதலால் கறவைமாடுகளில் பால் உற்பத்தியும், எருதுகளில் வேலைத்திறனும் குறையும். நோய் பாதித்த மாடுகளின் பாலை குடிப்பதன் மூலம், இளம் கன்றுகள் இறந்து விடுகின்றன. கடந்த, 2013ம் ஆண்டில் தமிழகத்தில் ஈரோடு, கரூர், திருப்பூர், தர்மபுரி உள்ளிட்ட மாவட்டங்களில், கோமாரி நோய் தாக்கத்தால், 1,000 க்கும் மேற்பட்ட கால்நடைகள் பலியானது. நடப்பாண்டு ஈரோடு, கரூர், தர்மபுரி, திருப்பூர் உள்ளிட்ட மாவட்டங்களில் செப்டம்பர், 1ம் தேதி முதல், 21 தேதி வரை அனைத்து கிராமங்களில் கோமாரி தடுப்பூசி

போடும் முகாம் நடக்கிறது. கோமாரி நோயை கட்டுப்படுத்த மாடுகளுக்கு மட்டும், "வேக்சின்' தடுப்பூசி போடப்படுகிறது. ஆடுகளுக்கு தடுப்பூசி போடாததால், ஆடு வளர்ப்போர் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

கால்நடை பராமரிப்பு துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:

கரூர் மாவட்டத்தில், 1.87 லட்சம் கால்நடைகள் உள்ளன. தடுப்பூசி மட்டுமே கால்நடைகளை கோமாரி நோயிலிருந்து காப்பாற்றும். கோமாரி நோயை தடுக்க, கரூர் உள்ளிட்ட மாவட்டங்களில் கால்நடை பராமரிப்பு துறை சார்பில், அனைத்து கிராமங்களிலும் செப்டம்பர், 1ம் தேதி முதல், 21ம் தேதி வரை, இலவசமாக கோமாரி தடுப்பூசி அளிக்கப்படுகிறது. அனைத்து கால்நடைகளுக்கும் கோமாரி நோய் தடுப்பூசி போட வேண்டும், என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், மாடுகளுக்கு தேவையான மருந்து உள்ளது. மீதி இருந்தால், அதிலிருந்து ஆடுகளுக்கு போடலாம், என்றார். ஆடு வளர்ப்போர் கூறியதாவது:

செம்மறி மற்றும் வெள்ளாடுகளை, கோமாரி நோய் உடனடியாக தாக்குகிறது. ஆனால், ஆடுகளுக்கு தடுப்பூசி போடுவது கிடையாது. ஆடுகளுக்கும் கோமாரி நோய் தடுப்பூசி போட வேண்டும். நூற்றுக்கணக்கான ஆடு வளர்ப்போர், அனைத்தையும் விற்பனை செய்வதில்லை. பல மாதங்களாக கஷ்டபட்டு வளர்த்த ஆடுகள் கோமாரி நோய் தாக்கி பலியாவதுடன், பொருளாதாரம் பாதிக்கப்படுகிறது. எனவே தான், நோய் தாக்குவதற்கு முன், ஆடுகளை குறைந்த விலைக்கு விற்க துவங்கி உள்ளோம், என்றனர்.

## வட மாநிலங்களில் அதிக கிராக்கி: ஜவ்வரிசி விலை இரு மடங்கு உயர்வு : ரசாயன கலப்படம் இல்லாததால் நல்ல வரவேற்பு

நாமக்கல் :ஜவ்வரிசி மாவில், மக்காச்சோள மாவு மற்றும் ரசாயனம் கலப்படம் செய்வதை தவிர்த்து, இயற்கை முறையில் (ஆர்கானிக் சேகோ) தயார் செய்வதால், வடமாநிலங்களில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. அதன் காரணமாக, தற்போது மரவள்ளி கிழங்கு மற்றும் ஜவ்வரிசி ஆகியவற்றின் விலை இரு மடங்கு உயர்ந்துள்ளது.தமிழகத்தில், நாமக்கல், சேலம், தர்மபுரி உள்ளிட்ட மாவட்டங்களில், மரவள்ளி கிழங்கு

அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது.அரசின் உரிமை பெறாமல்...:மரவள்ளி கிழங்கு மூலம், ஜவ்வரிசி, மாவு உள்ளிட்ட பொருட்கள் தயார் செய்யப்படுகின்றன. நாமக்கல், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, பெரம்பலுார், திருச்சி, ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்களில், சேகோ, ஸ்டார்ச் ஆலைகள் அதிகளவில் உள்ளன.இங்கு உற்பத்தி செய்யப்படும், ஜவ்வரிசி மற்றும் மாவு வடமாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. அதன் மூலம் சேமியா, சிப்ஸ் உள்ளிட்ட, 64 வகையான உணவு பொருள் தயார் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.இந்நிலையில், ஜவ்வரிசி உற்பத்தியில், உணவு பாதுகாப்பு சட்ட விதிமுறையை பின்பற்றாமல், அரசின் உரிமம் பெறாமல், ஈர மாவு விற்பனை செய்து வருகின்றனர்.அந்த ஈரமாவில், மக்காச்சோளம், 75 சதவீதமும், மரவள்ளி கிழங்கு மாவு, 25 சதவீதமும் கலப்படம் செய்வதாக குற்றச்சாட்டு எழுந்தது.அவ்வாறு கலப்படம் செய்யப்பட மாவு, ஆத்துாரில் இருந்து நாமக்கல் மாவட்டங் களுக்கு அதிக அளவில் கொண்டு வரப்பட்டது. மக்காச்சோளம் கலந்த ஜவ்வரிசியை மகாராஷ்டிரா, மத்திய பிரதேசம், குஜராத் போன்ற வெளிமாநிலங்களுக்கு அதிக அளவில் அனுப்பி வைக்கப்படுகிறது. இந்நிலையில், மரவள்ளிக் கிழங்கில் இருந்து தோல் உரித்த மக்காச்சோள மாவு மற்றும் எவ்வித ரசாயனமும் கலக்காமல் இயற்கையான முறையில் (ஆர்கானிக் சேகோ) தயாரிக்க முடிவு செய்த, ஜவ்வரிசி உற்பத்தி யாளர்கள், தமிழ்நாடு மரவள்ளி இயற்கை ஜவ்வரிசி உற்பத்தியாளர் சங்கம் என்ற பெயரில் புதிய சங்கத்தை துவக்கி உள்ளனர்.நல்ல வரவேற்பு:அதன் தலைவர் முத்துலிங்கம் கூறியதாவது:ஜவ்வரிசி உற்பத்தியில், ஈரமாவு மற்றும் மக்காச்சோள மாவு ஆகியவற்றை கலந்து விற்பனை செய்து வந்தனர். அவற்றை, உணவு பாதுகாப்பு துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் தலையிட்டு கட்டுப்படுத்தி உள்ளது. தற்போது, இயற்கை முறையில் ஜவ்வரிசி தயார் செய்து விற்பனை செய்யப் படுகிறது. அவற்றுக்கு நல்ல வரவேற்பும் கிடைத்துள்ளது. கடந்த, 10 ஆண்டுகளுக்கு முன் கிடைத்ததை போல், தற்போது, ஜவ்வரிசி மற்றும் மரவள்ளிக் கிழங்குக்கு நல்ல விலை கிடைத்துள்ளது.அதிக அளவில் சாகுபடி:இந்த மரவள்ளிக் கிழங்கு, நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை,

திருச்சி மாவட்டம், பச்சமலை, சேலம் மாவட்டம் கருமந்துறை, வேலூர் மாவட்டம் ஜவ்வாதுமலை ஆகிய பகுதிகளில் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது.கடந்த, 10 நாட்களுக்கு முன், 400 ரூபாய்க்கு விற்ற, 75 கிலோ கொண்ட ஒரு மூட்டை மரவள்ளி கிழங்கு, தற்போது, 5,000க்கு விற்பனையாகின. 90 கிலோ கொண்டு ஒரு மூட்டை ஜவ்வரிசி, 7,355 ரூபாய்க்கும் விற்பனையாகிறது.வட மாநிலங்களில் விமரிசையாக கொண்டாடப்படும் நவராத்திரி விழா, செப்டம்பர், 25ம் தேதி துவங்குகிறது. இதனால், ரசாயனம் கலக்காத இயற்கை முறையில் தயாரிக்கப் பட்ட, ஜவ்வரிசிக்கு நல்ல விலை கிடைத்து வருகிறது.மேலும் அதிகரிக்கும்:கடந்த சில மாதங்களாக அதிக அளவில் ஆலைகள் இயங்காமல் இருந்து இருந்தன. இந்நிலையில், நவராத்திரி விழாவை முன்னிட்டு, பெரும்பாலான ஜவ்வரிசி ஆலைகள் மும்முரமாக செயல்பட துவங்கியுள்ளன.ஜவ்வரிசியில் கலப்பட ஈரமாவு கலந்தால் மட்டுமே விவசாயிகளுக்கு கிழங்குக்கு அதிக விலை கிடைக்கும் என்ற நிலை, தற்போது மாறி உள்ளது. அதேபோல், ஈர மாவு கலப்படம் தற்போது நிறுத்தப்பட்டுள்ளதால், மரவள்ளிக்கு கிழங்குக்கும் அதிக விலை கிடைத்து வருகிறது. இதன் விலை, வரும் நாட்களில் மேலும் அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**<u>கை கொடுக்காத கொய்மலர் முட்டைகோசுக்கு மாறிய விவசாயிகள்</u>**

குன்னூர்: நீலகிரி மாவட்ட மலர் சாகுபடி தொழில் நலிவடைந்ததால், விவசாயி கள் அதிகளவில் முட்டைகோஸ் பயிரிட்டு வருகின்றனர். நீலகிரியில், 13 ஆண்டுக்கு முன் ஏற்பட்ட தேயிலை விலை வீழ்ச்சியை தொடர்ந்து, 'லாபம் கொழிக்கும் தொழில்' என்ற அறிவிப்புடன் கொய்மலர் சாகுபடியை மாற்றுத் தொழிலாக, தோட்டக்கலை துறை பிரபலப்படுத்தியது.அரசு ஒப்புதலுடன் மானியம் வழங்கியதால், மாவட்டத்தில், 500க்கும் மேற்பட்ட சிறு தேயிலை விவசாயிகள், தங்கள் தோட்டத்தின் ஒரு பகுதியை பசுமைக் குடிலாக மாற்றி, கார்னேஷன், லில்லியம், ஜெர்பரா மலர்களை சாகுபடி செய்தனர்.ஒரு செடியில், 6, 7 மலர்கள் மட்டுமே கிடைப்பதாலும், மூன்றாண்டு வரை சாகுபடி அளிக்க வேண்டிய நாற்றுகள், ஓராண்டில் அழுகி விட்டதாலும், வெளிநாடுகளில்

இருந்து மலர் நாற்றுகளை வாங்கி, வினியோகிக்கும் ஏஜன்டுகள், தரமற்ற நாற்றுகளை வழங்கியதாலும், விவசாயிகள் நஷ்டத்தை சந்தித்தனர். கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்பு இந்திய மலர் சாகுபடி குறித்து, பூனா விவசாய கல்லூரியின், 'ஹைடெக் மலர் சாகுபடி திட்ட வல்லுனர் குழுவினர் ஆய்வு நடத்தினர்.ஆய்வின் முடிவில், 'மலர் சாகுபடிக்கு, ரசாயன கலப்பு அதிகமுள்ள பூச்சி கொல்லி, பூஞ்சான மருந்து மற்றும் உரங்களை பயன்படுத்த வேண்டி உள்ளதால், மண்ணின் தன்மை பாதிக்கப் படுவதோடு, சுற்றுச்சூழலும் மாசுபடுவதாக தெரிவிக்கப் பட்டது. மேலும், செடி கொடி, வன விலங்குகளும் பாதிப்புக் குள்ளாவதாகவும், பசுமைக் குடிலில் பணிபுரியும் வேலையாட்களுக்கு ஆஸ்துமா, நுரையீரல், புற்றுநோய் ஏற்படும் வாய்ப்பு அதிகரிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.இதையடுத்து, தற்போது குன்னூர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் உள்ள கொய்மலர் சாகுபடி பசுமைக் குடில்களில், விவசாயிகள் முட்டைகோஸ் போன்ற மலைக் காய்கறிகளை பயிரிடுவதில், ஆர்வம் காட்ட துவங்கி உள்ளனர்.

**<u>வேளாண் காப்பீட்டு திட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை ஏற்பு : புதிய முறையில் எல்லா பயிருக்கும் இழப்பீடு கிடைக்கும்</u>**

நாமக்கல்: வேளாண் காப்பீட்டு திட்டத்தில், விவசாயிகளால், நீண்ட நாட்களாக முன் வைக்கப்பட்ட கோரிக்கைக்கு, மத்திய அரசு, தனிநபர் காப்பீட்டு திட்டத்திற்கு அனுமதி கொடுத்துள்ளது. அதனால், எந்த பயிரை, எந்த பகுதியில் பயிரிட்டாலும், காப்பீடு பெறப்பட்டு, அதற்கான இழப்பீடு தொகை கிடைக்க, வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.தேசிய அளவில், மாறுபட்ட சீதோஷ்ண நிலை, வானிலை மாற்றம், இயற்கை சீற்றம், வேளாண் பொருளை சந்தைப்படுத்துவதில் நிச்சயமற்ற நிலை, போதிய நிதி வசதியின்மை உள்ளிட்ட காரணங்களால், வேளாண் தொழிலில் ஈடுபட்டோர், பல்வேறு சவால் மற்றும் நெருக்கடியை சந்தித்து வருகின்றனர்.தேசிய வேளாண் காப்பீடு:இதுபோன்ற பிரச்னைகளால், சிறு மற்றும் குறு விவசாயி, மானாவாரி சாகுபடி விவசாயிகள் ஆகியோர், ஒவ்வொரு ஆண்டும், பெரும் இன்னல்களை சந்தித்து, தற்கொலை செய்து கொள்ளும் நிலையும் ஏற்படுகிறது. அதை தவிர்க்கும் பொருட்டு, மத்திய,

மாநில அரசுகளின் சார்பில், காப்பீட்டு திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன.அதில், தேசிய வேளாண் காப்பீட்டு திட்டம், மாற்றி யமைக்கப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டு திட்டம், வானிலை அடிப்படையிலான பயிர் காப்பீட்டு திட்டம், தென்னை காப்பீடு திட்டம் உள்ளிட்ட பயிர்காப்பீட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவ்வாறு, விவசாயியால் காப்பீட்டு தொகை செலுத்திய பின், அவற்றை பெறுவதிலும், மதிப்பீடு செய்வதிலும், பல்வேறு பிரச்னைகளை, விவசாயிகள் சந்திக்கின்றனர்.நிர்ணயம்:குறிப்பாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் உற்பத்தி செய்யப்படும், வேளாண் பொருட்களை அடிப்படையாக கொண்டு, பிர்கா வாரியாக, காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அதில், விவசாயிகள், தன்னிச்சையாக எந்த பயிரையும், தன்னுடைய தோட்டத்தில் பயிரிட்டு, காப்பீடு செய்ய முடியாது.'சேட்டிலைட்' மூலம் மத்திய, மாநில அரசால் அடையாளம் காணப்பட்ட பகுதிகளில், நிர்ணயம் செய்யப்பட்ட பயிர்களை சாகுபடி செய்தால் மட்டுமே, சம்பந்தப்பட்ட விவசாயி, காப்பீட்டு திட்டத்தில் நுழைய முடியும். மற்றபடி, வேறு பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, காப்பீடு வசதி கிடைக்காது.எந்த பயிரை பயிரிட்டாலும், காப்பீடு செய்து தர வேண்டும். அதற்கான இழப்பீடு தொகையும், முழுமையாக வழங்க வேண்டும் எனக்கூறி, பல ஆண்டுகளாக, விவசாயிகள் தொடர்ந்து போராடி வருகின்றனர். இதுதொடர்பாக, தமிழக அரசு, 2013 – -14ம் நிதியாண்டில், விருதுநகர் மற்றும் வேலூர் மாவட்டத்தில், முன்னோடி திட்டமாக, தனிநபர் காப்பீட்டு திட்டம் செயல்படுத்த முடிவு செய்தது.இருப்பினும், காப்பீடு என்பது, மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதால், அதற்கான அனுமதி கிடைக்கவில்லை. அதனால், அறிவிக்கப்பட்ட திட்டம் செயல்படுத்த முடியாமல், கிடப்பில் இருந்தது. இந்நிலையில், தற்போதைய மத்திய அரசு, தனிநபர் காப்பீட்டு திட்டத்தை செயல்படுத்துவதற்கு, அனுமதி வழங்கியுள்ளது. அதையடுத்து, தமிழகத்தில் தேர்வு செய்யப்பட்ட, சில மாவட்டங்களில், பரிச்சார்த்த முறையில் செயல்படுத்த, வேளாண் துறை அதிகாரிகள் முடிவு

செய்துள்ளனர். அதற்காக, சில குறிப்பிட்ட வேளாண் வட்டார விவசாயிகளிடம், தனிநபர் காப்பீடு செய்வது குறித்த விழிப்புணர்வு மற்றும் திட்டப்பயன்களை சொல்லி, காப்பீட்டில் சேர அழைப்பு விடுத்து உள்ளனர்.தனிநபர் காப்பீடு:இதுகுறித்து, வேளாண் காப்பீட்டு திட்ட அதிகாரி ஒருவர் கூறியதாவது:இந்திய வேளாண் காப்பீட்டுக் கழகத்தின் சார்பில், விவசாயிகள் பயிரிட்ட குறிப்பிட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பகுதி வேளாண் பொருட்களுக்கு மட்டுமே, காப்பீடு வசதி செய்யப் பட்டது.தற்போது, மத்திய அரசின் அனுமதி கிடைத்துள்ளதால், பரிச்சார்த்த முறை, ஒவ்வொரு மாவட்டத்திலும், தலா ஒரு பிர்கா வீதம், தனிநபர் காப்பீட்டு திட்டம் அறிமுகப்படுத்தப்படும். அதன் விரிவான திட்ட அறிக்கை, அரசிடம் இருந்து விரைவில் வெளியிடப்படும். இதனால், எந்த பயிரும் பயிரிட்டு இழப்பு ஏற்பட்டால், இழப்பீடு பெறலாம்.இவ்வாறு, அவர் கூறினார்.

## முட்டை விலை 315 காசாக உயர்வு

நாமக்கல் :மிழகம் மற்றும் கேரளாவில், முட்டை கொள்முதல் விலை, 315 காசாக நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, முட்டை கொள்முதல் விலையில், 300 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, 15 காசு அதிகரித்து, 315 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது.நாட்டின் பிற மண்டலங்களில், முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:சென்னை, 335, பெங்களூரு, 335, மைசூரு, 323, ஐதராபாத், 304, மும்பை, 343, விஜயவாடா, 309, கோல்கட்டா, 365, பர்வாலா, 315, டில்லி, 330.இவ்வாறு, நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 56 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை கிலோ, 77 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டது.

## மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு தொழில் துவங்க கடன் வழங்கல்

உடுமலை : உடுமலை சோமவாரப்பட்டி தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கம் சார்பில், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு தொழில் துவங்க கடன் உதவி வழங்கப்பட்டது. சோமவாரப்பட்டி கிராமத்தில், தொழில் துவங்க கடனுதவி கேட்டு, தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில், மகளிர் சுய உதவிக்குழுவினர் விண்ணப்பத்திருந்தனர். குழுக்களின் செயல்பாடு அடிப்படையில், தடுக்கு பின்னுதல், துணி வியாபாரம், சீமாறு உரித்தல், காய்கறி வியாபாரம் உட்பட தொழில்களை மேற்கொள்ள கூட்டுறவு கடன் சங்கத்தின் மூலம் 22 லட்ச ரூபாய் கடன் உதவி ஒதுக்கப்பட்டது. மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி துணைத்தலைவர் சுந்தரசாமி கடன் உதவிகளை மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு வழங்கினார்.மேற்பார்வையாளர் நாசர் அலி மகளிர் சுய உதவிக்குழுக்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து விளக்கமளித்தார். கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழுவினர் பங்கேற்றனர்.

## காஞ்சிபுரம் மாவட்டத்தில் பரவலாக மழை

காஞ்சிபுரம் : காஞ்சிபுரம் மாவட்டத்தில், நேற்று சில இடங்களில் பரவலாக மழை பெய்தது, விவசாயிகளுக்கு ஆறுதலை அளித்தது.காஞ்சிபுரம் மாவட்டத்தில் தென் மேற்கு பருவமழை, இந்த ஆண்டு எதிர்பார்த்த மழைப்பொழிவை கொடுக்கவில்லை. செப்டம்பர் மாத இறுதி வரையில், பருவ மழைக்கான காலம் இருப்பதால், அதற்குள் மழை பொழியும் என, விவசாயிகள், நடவுக்காக காத்திருக் கின்றனர். கடந்த இரண்டு ஆண்டுகளாக மழை பொய்த்து போனதால், மாவட்டத்தில் விவசாயம் பாதித்து, குடிநீர் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. கன மழை பெய்து விவசாயிகளுக்கு கைகொடுக்கும் என்று விவசாயிகள் எதிர்பார்த்து இருக்கின்றனர்.இந்த நிலையில், கடந்த சில நாட்களாக கருமேகம் சூழ்ந்து, மழை பொழிவதுபோல் போக்கு காட்டி வந்த மழை, நேற்று பிற்பகல் 2:30 மணியளவில் காஞ்சிபுரத்தில் பெய்து, நகரவாசி களை மகிழ்வித்தது. இதனால் வெப்பம் குறைந்து குளிர்ச்சி ஏற்பட்டது. இதேபோல், மாவட்டத்தில் உத்திரமேரூர், வாலாஜாபாத், திருப்போரூர்,

திருக்கழுக்குன்றம், மாமல்லபுரம் போன்ற இடங்களிலும் பரவலாக மழை பெய்தது.இந்த மழையால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். தொடர்ந்து மழை பெய்தால், பட்டம் தவறி விதைத்து பலன் பெறலாம் என்ற நம்பிக்கையில் உள்ளனர்.

## ஒரே வாரத்தில் 32 சதவீத மாடுகளுக்கு தடுப்பூசி

காஞ்சிபுரம் : கறவை மாடுகளுக்கு கோமாரி தடுப்பூசி போடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ள தால், கடந்த ஒரு வாரத்தில், 32 சதவீத மாடுகளுக்கு, கோமாரி தடுப்பூசி போடப்பட்டு உள்ளது.காஞ்சிபுரம் மாவட்ட கறவை மாடுகளுக்கு, ஏழாம் கட்டமாக கோமாரி தடுப்பூசி போட, மாவட்டம் முழுவதும், 4,42,320 கறவை மாடுகளுக்கு, இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. கடந்த 1ம் தேதி, 89 மருத்துவ குழுக்கள் மூலம் இந்த முகாம் தொடங்கியது. பல்வேறு காரணங்களால், இந்த தடுப்பூசியை போட கால்நடை விவசாயிகள் தயக்கம் காட்டியதால், மாவட்டம் முழுவதும் உள்ள கறவை மாடுகளுக்கு தடுப்பூசி போடும் பணியை விரைந்து முடிக்க கால்நடைத் துறை உத்தரவிட்டது.அதன்படி, கடந்த 1ம் தேதி தொடங்கிய இந்த முகாம் மூலம் ஒரே வாரத்தில், 1,44,540 கறவை மாடுகளுக்கு, கோமாரி தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக, கால்நடைத் துறை தெரிவித்துள்ளது.

## சம்பா பருவ நாற்று நடும் பணி தீவிரம்

திருவள்ளூர் : சம்பா பருவத்தை அடுத்து, வயல்களில், நாற்று நடும் பணி, தீவிரமாக நடைபெற்று வருகிறது.திருவள்ளூர் மாவட்டத்தில், தற்போது, சம்பா பருவத்தில் நெல் பயிரிடும் பணியில், விவசாயிகள் ஈடுபட்டு உள்ளனர். பருவமழை பொய்த்து போனதால், ஏரிப்பாசன விவசாயிகள் பெரும்பாலானோர், மழையை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.ஆறு, ஏரிகள் அருகில், கிணற்று பாசன விவசாயிகள், கிணற்றில் உள்ள நிலத்தடி நீரை நம்பி, நாற்று நடும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு உள்ளனர்.திருவள்ளூர், பூண்டி, சோழவரம், எல்லாபுரம், மீஞ்சூர் ஒன்றியங்களில், கிணற்று நீர் பாசன விவசாயிகள், சம்பா பருவத்திற்கான நாற்று நடும் பணியில் ஈடுபட்டு உள்ளனர்.ஏற்கனவே, சம்பா

பருவத்திற்கு தேவையான, விதை நெல், உரங்கள் போன்ற இடுபொருட்கள், அனைத்து வேளாண் நிலையங்களிலும், தேவையான அளவு இருப்பு உள்ளதாக, வேளாண்துறை அறிவித்து உள்ளது.இதன் காரணமாக, திருவள்ளூர் - ஊத்துக்கோட்டை சாலையில், வயல்வெளிகள் பசுமையாக காட்சியளித்து, கண்களுக்கு விருந்தளித்து உள்ளது.

## 1,700 மஞ்சள் மூட்டை ரூ. 57 லட்சத்துக்கு ஏலம்

ஆத்தூர்: ஆத்தூர், வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த ஏலத்தில், 1, 700 மூட்டை மஞ்சள், 57 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று முன்தினம் நடந்த மஞ்சள் ஏலம் நடந்தது. 120 விவசாயிகள், 1, 700 மூட்டை மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். இதில், விரலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம் 4, 269 ரூபாய், அதிகபட்சம் 6, 809 ரூபாய், உருண்டை மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம் 4, 229 ரூபாய், அதிகபட்சம் 6, 409 ரூபாய்க்கு விற்பனையானது.

## மேட்டூர் அணை நீர்மட்டம் 103.5 அடியாக உயர்வு

மேட்டூர்: கபினி, கே.ஆர்.எஸ்., உபரி நீர்வரத்தால், நேற்று, மேட்டூர் அணையின் நீர்மட்டம், 103.5 அடியாக அதிகரித்தது. கர்நாடகாவின் கபினி, கே.ஆர்.எஸ்., அணை உபரி நீர், தொடர்ச்சியாக வருவதால், நேற்று முன்தினம், 103.300 அடியாக இருந்த, மேட்டூர் அணை நீர்மட்டம், நேற்று, 103.560 அடியாகவும், 69.226 டி.எம்.சி.,யாக இருந்த நீர்இருப்பு, நேற்று, 69.533 டி.எம்.சி.,யாகவும் அதிகரித்தது. நேற்று, அணைக்கு வினாடிக்கு, 24 ஆயிரத்து, 718 கனஅடி நீர் வந்தது. வினாடிக்கு, 20 ஆயிரம் கனஅடி நீர், டெல்டா பாசனத்துக்கு திறக்கப்பட்டது. இதனால், நான்கு நாட்களுக்கு ஒரு டி.எம்.சி., வீதம், மேட்டூர் அணை நீர் இருப்பு அதிகரிக்கிறது.

## குட்டை ரக செண்டுமல்லி பயிரிடும் பரப்பு அதிகரிப்பு

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நிலவும் சீதோஷ்ண நிலை

காரணமாக, ஓசூர் பகுதியில் ரோஜா மற்றும் காவேரிப்பட்டணம் பகுதியில் குண்டுமல்லி ஆகியவை அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. ஓசூர் பகுதியில் சாகுபடி செய்யப்படும் ரோஜா மலர்கள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. காவேரிப்பட்டணம் பகுதியில் சாகுபடி செய்யப்படும் குண்டுமல்லி, பெங்களூருக்கு கொண்டு செல்லப்பட்டு வட மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. வேப்பனப்பள்ளி, பர்கூர், மத்தூர், போச்சம்பள்ளி, தட்டக்கல், காவேரிப்பட்டணம் ஆகிய பகுதியில் அதிகளவில், நெட்டை ரக செண்டுமல்லியை விவசாயிகள் பயிரிட்டு வந்தனர். இங்கு அறுவடை செய்யப்படும் பூக்கள் வெளி மாவட்டங்களுக்கு அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்த ரக செடிகள், மூன்று அடி வளர்ந்த பின்பு தான் பூக்கள் பூக்கும். நெட்டை ரகத்தில் இருந்து அதிக அளவில் ஆண் பூக்கள் பூப்பதால், பாதியளவுக்கு பூக்கள் வீணாகிவிடும். இதனால், விவசாயிகளுக்கு குறைந்த அளவே லாபம் கிடைத்து வந்தது.

இந்நிலையில், கடந்த, 2009ம் ஆண்டு தோட்டக்கலைதுறையினர் கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகளுக்கு குட்டை ரக செண்டுமல்லி செடியை அறிமுகப்படுத்தினர். இந்த ரக செடிகள் நட்டு, ஒரு அடி உயரம் வளர்ந்தவுடன் பூக்கள் பூக்க ஆரம்பித்து விடுகிறது. வீரிய ஒட்டு ரகமான இந்த செண்டுமல்லி செடியில் அனைத்தும் பெண் பூக்களாக பூப்பதால், விவசாயிகளுக்கு இரட்டிப்பு விளைச்சல் கிடைக்கிறது. மேலும், செடிகள் நட்டு, 40 நாட்களில் பூக்கள் அறுவடைக்கு வந்து விடுகிறது. ஐந்து நாட்களுக்கு ஒரு முறை பூக்கள் அறுவடை செய்யும் நிலையில், விவசாயிகளுக்கு அதிக லாபம் கிடைத்து வருகிறது. இதன் காரணமாக, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் குட்டை ரக செண்டுமல்லி சாகுபடி பரப்பு, கடந்த ஆண்டை காட்டிலும் இந்த ஆண்டு அதிகரித்துள்ளது.

நாரளப்பள்ளியை சேர்ந்த விவசாயி அரசன் கூறியதாவது:

எப்போதுமே, செண்டுமல்லி பூவுக்கு நல்ல வரவேற்பு இருக்கும். தற்போது, பண்டிகை காலம் நெருங்கி வரும் வேளையில், பூவுக்கு நல்ல கிராக்கி இருக்கும். பண்டிகை காலத்தை குறி வைத்து குட்டை ரக செண்டுமல்லி பூவை நடவு செய்தோம். வீரிய ஒட்டு ரகமான இந்த

செடியை, சேட் நெட்டில் வளர்த்து நிலத்தில் நடவு செய்ய ஒரு செடிக்கு தோராயமாக, 20 ரூபாய் செலவாகிறது. நடவு நட்டு, 40 நாட்களில் பூக்கள் அறுவடைக்கு வந்து விடுகிறது. ஒரு கிலோ பூ தற்போது, 30 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆயுத பூஜை, தீபாவளி பண்டிகை காலங்களில் இதன் விலை மேலும் உயரும் என்று எதிர்பார்க்கிறோம். கடந்தாண்டு குட்டை செண்டு மல்லி சாகுபடி செய்த விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைத்தது. இதையடுத்து, மாவட்டம் முழுவதும் இந்தாண்டு அதிக பரப்பில் விவசாயிகள் இந்த ரகத்தை சாகுபடி செய்துள்ளனர். கடந்தாண்டு மாவட்டம் முழுவதும் 1,000 ஏக்கர் மட்டுமே சாகுபடி செய்யப்பட்டது. இந்தாண்டு, 2,500 ஏக்கரில் குட்டை ரக செண்டுமல்லி சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

**<u>பார்த்தீனிய செடிகளை கட்டுப்படுத்த வேளாண் அதிகாரிகள் யோசனை</u>**

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்டத்தில், சாலையோரம் மற்றும் விவசாய நிலங்களில் பரவியுள்ள பார்த்தீனியம் செடிகளை உழவியல் கட்டுப்பாடு, உயிரியல் கட்டுப்பாடு, ரசாயன கட்டுப்பாடு முறைகளை கடைபிடித்து அழிக்கலாம்,' என்று, வேளாண் துறையினர் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து, வேளாண் துறை அதிகாரிகள் கூறியதாவது: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், விவசாய நிலங்கள், வீட்டுத்தோட்டங்கள், சாலையோரங்கள் ஆகிய இடங்களில், ஆங்காங்கே பார்த்தீனியம் செடிகள் பரவியுள்ளது. இது, ஒரு வேகமாக பரவும் களையாகவும், கால்நடைகள் மற்றும் மனிதனுக்கு தீங்கு விளைவிக்கும் விஷ செடியாகவும் உள்ளது. குறிப்பாக, மனிதனுக்கு பார்த்தீனிய செடியால் தோல் வியாதியும், சுவாச கோளாறும் ஏற்படுகிறது. இந்த விஷச்செடியை கட்டுப்படுத்தி அழிக்காவிட்டால், இதனால், ஏற்படும் தீய விளைவுகள் மிக அதிகமாக விடும். ஒவ்வொரு பார்த்தீனியம் செடியில் இருந்தும், 10 ஆயிரம் விதைகள் உற்பத்தியாகி, காற்று மூலம் வேகமாக பரவுகிறது. மேலும், வருடம் முழுவதும் இந்த செடி பூத்து குலுங்குவதால், எல்லா பருவங்களிலும், இது தடையின்றி பரவி வருகிறது. எனவே, பார்த்தீனியம் செடியை விவசாயிகள் பல்வேறு முறைகளை கையாண்டு அழிக்கலாம். உழவியல் முறைப்படி இளஞ்செடிகளை கையால் வேரோடு

பறித்து, எரித்துவிடலாம்.பயிற்சுழற்சி முறைப்படி விளை நிலங்களில், சாமந்தி பயிரிடுவதன் மூலம் கட்டுப்படுத்தலாம். பார்த்தீனியம் செடிகளை பூப்பதற்கு முன், மக்க வைப்பதன் மூலம் விதைகளின் முளைப்பு திறனை அழிக்கலாம். இந்த முறையில் பார்த்தீனியம் செடிகளை கத்தி மூலமாக சிறு, சிறு துண்டுகளாக வெட்டி தரையில், 10 செ.மீ., உயரத்துக்கு அடுக்க வேண்டும். அதன் மேல், டிரைக்கொடர்மா விருடி பூஞ்சான காரணியை பரப்பி, அதன் மேல் அரை சதம் யூரியா கரைசலை தெளிக்கவும்.

இவ்வாறு, ஒரு மீட்டர் உயரத்துக்கு, அடுக்கி மண்ணை கொண்டு பூசி மூடவேண்டும். இரு வாரங்களுக்கு பின், ஒரு முறை நன்றாக கிளறி விடவேண்டும். இதன் மூலம், 40 நாட்களில், இது சத்துமிக்க உரமாகி விடுகிறது. இவ்வாறு தயாரிக்கப்படும் மக்கிய உரத்தை எல்லா பயிர்களுக்கும் இடலாம். இந்த முறையில், பார்த்தீனிம் கட்டபப்படுத்துவதோடு, அவற்றை உரமாக மாற்றுவதன் மூலம் இரட்டிப்பு பயன் கிட்டுகிறது. மேலும், நிலப்போர்வை முறையில், நிலத்தின் மீது பாலிதீன் போர்வை கொண்டு மூடுவதால் ஒளிச்சேர்க்கை கட்டுப்படுத்தப்பட்டு, இச்செடிகள் அழிக்கப்படுகிறது. மேலும், இதன் மூலம் நிலத்தில், ஈரப்பதத்தை நிலை நிறுத்துவதோடு மண்ணின் வளமும் அதிகரிக்கிறது. சைகோகிராமா பைகளோரேட்டா என்ற பார்த்தீனியம் தழைகளை உண்ணும் மெக்சிகன் வண்டுகளை விடுதன் மூலமும், அதே போல, பக்சீனியா பூஞ்சானத்தை தெளிப்பதன் மூலமும் பார்த்தீனியத்தை கட்டுப்படுத்தலாம். மேலும், பயிரிடப்படாத இடங்களாக வெட்ட வெளிகள் ,சாலை ஓரங்கள், வீட்டு சுற்றுவட்டாரங்கள் போன்ற இடங்களில் பார்த்தீனியத்தை கட்டுப்படுத்த, ஒரு லிட்டர் தண்ணீருக்கு, 200 கிராம் வீதம் சமையல் உப்பை நன்கு கரைத்து, அத்துடன், 2 மி.லிட்டர் ஒட்டு திரவம் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். ஒரு லிட்டர் தண்ணீருக்கு, 8 கிராம் சோடியம் உப்பை நன்கு கரைத்து அத்துடன், இரண்டு மி.லிட்டர் ஒட்டு திரவம் கலந்து தெளித்தும், பார்த்தீனியத்தை கட்டுப்படுத்தலாம். முளைத்த பின் களைக்கொல்லியான மெட்ரிபூஜின், மூன்று கிராமை, ஒரு லிட்டர் தண்ணீரில் கரைத்து, பயிரில்லாத நிலையில் தெளிக்க வேண்டும். மேலும், விளை நிலங்களில் பயிருக்கு

தகுந்தவாறு ரசாயன களைக்கொல்லி மருந்துகளை பயன்படுத்தியும், பார்த்தீனியம் செடிகளை கட்டுப்படுத்தலாம். எனவே, அனைத்து விவசாயிகளும், இந்த ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு முறைகளை கையாண்டு, பார்த்தீனியம் களைச்செடிகளை கட்டுப்படுத்தி பயன் அடையலாம், என்றனர்.

**<u>கி.கிரி மாவட்டத்தில் ஒரு லட்சம் மீன் குஞ்சுகள் இருப்பு: கலெக்டர்</u>**

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், நீர்வள நில வள திட்டத்தின் கீழ், நீர் நிலைகளில் ஒரு லட்சம் மீன் குஞ்சுகள் இருப்பு வைக்க, இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளதாக கலெக்டர் ராஜேஸ் தெரிவித்துள்ளார். கிருஷ்ணகிரி ஒன்றியத்தில், செம்படமுத்தூர், கூலியம் மற்றும் கொண்டேப்பள்ளி ஆகிய கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு விவசாயிகளின் திட்ட செயல்பாடுகள் குறித்து கலெக்டர் ராஜேஸ் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது, கலெக்டர் கூறியதாவது:

கூலியம் கிராமத்தில், வேளாண்மைத் துறை வாயிலாக, 168 ஹெக்டரில் திருந்திய நெல் சாகுபடியும், தோட்டக்கலைத்துறை சார்பில், 20 ஹெக்டரில், தக்காளி, கத்திரி சாகுபடியும், கால்நடை பராமரிப்பு துறை சார்பில், கோ-3 மற்றும், கோ-4 தீவன பயிர் வளர்ப்பு, 52 ஹெக்டேரில் பயிரிடப்பட்டு உள்ளது. மேலும், இந்த கிராமத்தில் வேளாண் வணிகத்துறை சார்பில், 50 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட தானியங்கள் சேமிப்பு கிடங்கு, 10 லட்ச ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டு வருகிறது. மேலும், 4 லட்ச ரூபாய் மதிப்பில் உலர் தானியக்களம், இக்கிராமத்தில்அமைக்கப்பட்டு உள்ளது. மீன்வளத்துறை மூலமாக, மாதிரி கிராமங்களில் உள்ள நீர் நிலைகளில் நன்கு வளர்ந்த விரால் மீன் குஞ்சுகள் இருப்பு செய்யும் திட்டத்தின் கீழ், கிருஷ்ணகிரி மாவட்டத்துக்கு ஹெக்டருக்கு, 1,000 மீன்குஞ்சுகள் வீதம், 100 ஹெக்டருக்கு, ஒரு லட்சம் மீன் குஞ்சுகள் இருப்பு செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கூலியம் ஏரியில் நன்கு வளர்ந்த இந்திய பெருங்கெண்டை இனத்தை சார்ந்த மீன் விரால்கள், 10 ஆயிரம் எண்ணிக்கை இருப்பு செய்யப்பட்டு உள்ளது. இவைகள் தற்பொழுது, அரை கிலோ முதல், ஒரு கிலோ வரை வளர்ச்சி அடைந்துள்ளது. இதன்மூலம், பயனாளிகள் இவ்வாண்டில்

சராசரியாக, ஐந்து டன் மீன் பிடித்து பயன்பெறுவர். இதன் மூலம் பயனாளிகள் பொருளாதார ஏற்றம் பெருகுவதோடு, பொதுமக்களுக்கு அதிக புரதம் நிறைந்த மீன் உணவு கிடைக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

## அக்., முதல் ஆன்லைனில் மஞ்சள் வர்த்தகம் : ஏற்பாடுகள் தீவிரம்

ஈரோடு: கருமாண்டி செல்லிபாளையத்தில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த மஞ்சள் வணிக வளாகத்தில் அக்., முதல் மஞ்சள் ஆன்லைன் வர்த்தக வசதி ஏற்படுத்தப்பட உள்ளது. இம்மாவட்டத்தில் அனைத்து விவசாயிகளும் தங்கள் மஞ்சளை ஒரே இடத்துக்கு கொண்டு வந்து விற்பனை செய்யும் பொருட்டு, ஒருங்கிணைந்த மஞ்சள் வணிக வளாகம் அமைப்பதற்காக, பெருந்துறை கருமாண்டி செல்லிபாளையத்தில் ஏழரை ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டது. ஈரோடு சுண்ணாம்பு ஓடையில் வாடகை இடத்தில் செயல்படும் ஒழுங்கு முறை விற்பனை கூடம் மற்றும் அவல் பூந்துறையில் கொண்டு வரப்பட இருந்த, ஆன்லைன் வர்த்தகமும் அக்., மாதம் முதல் கருமாண்டி செல்லிபாளையம் வணிக வளாகத்தில் இயங்க உள்ளது. வேளாண் விற்பனை துறை உதவி இயக்குனர் சுப்பிரமணியம் கூறியதாவது: கருமாண்டி செல்லிபாளையத்தில் ஒருங்கிணைந்த மஞ்சள் வணிக வளாகம் ரூ.17 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. சுமார், 14,500 மெட்ரிக் டன் மஞ்சள் இருப்பு வைக்க முடியும். 600 மெட்ரிக் டன் திறன் கொண்ட இரண்டு குடோன்கள், ஒரு, 10,000 மெட்ரிக் டன் குடோன், இரண்டாயிரம் மெட்ரிக் டன்னில் ஒரு குடோன் மற்றும் புதிதாக ஆயிரம் மெட்ரிக் டன்னில் கட்டப்பட்ட இரண்டு குடோன்கள் உள்ளன. உலர் கலன், அலுவலகம், பரிவர்த்தனை அறை, வங்கி வசதி, கேன்டீன், விவசாயிகள், வியாபாரிகள் ஓய்வறை, கழிவறை உள்ளிட்ட அனைத்து வசதிகளும் உள்ளன. தேசிய நெடுஞ்சாலையில் அமைந்து இருப்பதால் கர்நாடகா, ஆந்திரா மாநிலத்தவர் மட்டுமின்றி திருவண்ணாமலை, வேலூர், சேலம், கோவை உள்ளிட்ட பகுதிகளில் இருந்து விற்பனைக்கு கொண்டு வரும் விவசாயிகளுக்கு போக்குவரத்து வசதி எளிதாக இருக்கும். சுண்ணாம்பு ஓடையில் வாடகை இடத்தில் இயங்கும், ஒழுங்குமுறை விற்பனை

கூடத்தை மாற்றுவதற்கான கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அவல்பூந்துறையில் வரவிருந்த ஆன்லைன் டிரேடிங் முறையும், கருமாண்டி செல்லிபாளையத்திற்கு மாற்றப்படுகிறது. இதனால் விவசாயிகள் தங்கள் மஞ்சளின் தரத்தை அறிந்து கொள்ள முடியும். ஆன்லைனில் விற்பதால் வட மாநில வியாபாரிகளும் ஏலத்தில் பங்கேற்க முடியும். எனவே விவசாயிகளுக்கு அதிக வருவாய் கிடைக்க வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## <u>விவசாய குறைதீர்ப்பு கூட்டம்</u>

ஊட்டி : ஊட்டியில், வரும் 19ம் தேதி, விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் நடத்தப்பட உள்ளது.நீலகிரி மாவட்ட தோட்டக்கலை இணை இயக்குனர் மணி, வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட கலெக்டர் தலைமையில், வரும் 19ம் தேதி, காலை 10:30 மணிக்கு, மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடத்தப்பட உள்ளது. விவசாயிகள், தங்களின் பொதுவான கோரிக்கைகளை தவிர்த்து, விவசாயம் தொடர்பான நீர் பாசனம், இடு பொருட்கள் போன்ற கோரிக்கைகளை மட்டும், "இணை இயக்குனர், தபால் பெட்டி எண் 72, ஊட்டி- 1' என்ற அலுவலக முகவரிக்கு தபால் அல்லது நேரில் அனுப்பி வைக்க வேண்டும்.இவ்வாறு, மணி கூறினார்.

## <u>மூங்கில் "குகைக்குள்' பசுமை பயணம்</u>

கூடலூர் : கூடலூர் - தொரப்பள்ளி சாலையில் குகை போன்று வளர்ந்துள்ள மூங்கில்கள் பார்வையாளர்களை கவர்ந்து வருகின்றன.கூடலூர் பகுதியில், சாலை ஒரங்களில் உள்ள பசுமை மரங்கள் இவ்வழியாக, செல்லும் சுற்றுலா பயணிகளின் கண்ணுக்கு விருந்தாக அமைகிறது. குறிப்பாக, கூடலூர் - தொரப்பள்ளி சாலையில், மாக்கமூலா முதல் தொரப்பள்ளி வரை சாலையின் இருபுறமும், 1 கி.மீ., தூரத்துக்கு வளர்ந்துள்ள மூங்கில்கள், சாலை நடுவே சாய்ந்து ஒன்றோடு ஒன்றாக இணைந்து, "குகை' போன்று காணப்படுகின்றன. இக்காட்சியும், இப்பகுதியில் நிலவும் மிதமான காலநிலையும் சுற்றுலா பயணிகளை

வெகுவாக கவர்ந்துள்ளது. இதனால், இப்பகுதியில் வாகனங்களை நிறுத்தி "போட்டோ' எடுப்பதில் பலரும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## தேயிலை செடிகளுக்கு உரமிடும் பணிகள் துரிதம்

மஞ்சூர் : பரவலான மழையால் தேயிலை செடிகளுக்கு உரமிடும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.மஞ்சூர் சுற்றுவட்டார பகுதியில் தேயிலை விவசாயம் பிரதான தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த சில மாதங்களாக பரவலாக பெய்த மழையால் தேயிலை மகசூல் அதிகரித்தது. கூட்டுறவு மற்றும் தனியார் தொழிற்சாலைகளில் அளவுக்கு அதிகமாக கொள்முதல் செய்யப்பட்டதுடன், தேயிலை தூள் உற்பத்தியும் விறுவிறுப்பாக நடந்தது. இந்நிலையில், கடந்த ஒரு வாரமாக மீண்டும் மழை பெய்தது. தேயிலை செடிகளில் நல்ல ஈரப்பதம் கிடைத்தது. இதையடுத்து தேயிலை செடிகளில் உரமிடும் பணியை விவசாயிகள் துவக்கினர். "யூரியா, அமோனியாபேஸ்' உரம் தேவைக்காக கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை, என்.சி.எம்.எஸ்., வங்கிகளில் விவசாயிகள் உரத்திற்காக முன்பதிவு செய்தனர். இந்நிலையில், தற்போது வாங்கப்பட்ட உரத்தை தேயிலை செடிகளுக்கு தெளிக்கும் பணிகளில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். மேலும், "தற்போது விவசாயிகளுக்கு தேவையான உரத்தை தட்டுப்பாடின்றி வழங்க வேண்டும்' என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## விவசாயத்திற்கு மஞ்சளாறு அணையை திறக்க வலியுறுத்தல்

வத்தலக்குண்டு : வத்தலக்குண்டு பகுதி விவசாயத்திற்கு மஞ்சளாறு அணை திறக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர். வத்தலக்குண்டு ஒன்றியம் மஞ்சளாறு அணையின் கடைமடை பகுதியாகும். நீர் ஆதாரச்சட்டத்தில் கடைமடையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என கூறப்பட்டு உள்ளது. ஆனால் இங்கு நிலைமை தலைகீழாக உள்ளது. அணை தேனி மாவட்டத்தில் இருப்பதாலும், அரசியல் செல்வாக்கினை பயன்படுத்தி அணையின் தலைப்பகுதியில் உள்ள தேவதானப்பட்டி விவசாயிகளே அதிகமாக பயன் அடைந்து வருகின்றனர். கடைமடை பகுதிக்கு நீர் திறப்பது இல்லை. இதனால் மஞ்சளாறு பாசனத்தை கொண்டு வத்தலக்குண்டு

விவசாயிகள் இரண்டு ஆண்டுகளாக விவசாயம் செய்ய முடியவில்லை. கொடைக்கானல் மலையில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்வதால், மஞ்சளாறு அணை 40 அடியை எட்டியுள்ளது. இந்த நீரை பழைய வத்தலக்குண்டு கண்மாய் வரை திறந்து விட்டால் 500 ஏக்கர் நிலம் பயன்அடையும். நூற்றுக்கணக்கான கிணறுகள், வழிப்பாதையில் உள்ள கண்மாய், குட்டைகள் நிரம்பும். பொதுப்பணித்துறை அதிகாரிகள் விவசாயத்திற்கு மஞ்சளாறு அணையை திறக்க விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர். வத்தலக்குண்டு : வத்தலக்குண்டு பகுதி விவசாயத்திற்கு மஞ்சளாறு அணை திறக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர். வத்தலக்குண்டு ஒன்றியம் மஞ்சளாறு அணையின் கடைமடை பகுதியாகும். நீர் ஆதாரச்சட்டத்தில் கடைமடையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என கூறப்பட்டு உள்ளது. ஆனால் இங்கு நிலைமை தலைகீழாக உள்ளது. அணை தேனி மாவட்டத்தில் இருப்பதாலும், அரசியல் செல்வாக்கினை பயன்படுத்தி அணையின் தலைப்பகுதியில் உள்ள தேவதானப்பட்டி விவசாயிகளே அதிகமாக பயன் அடைந்து வருகின்றனர். கடைமடை பகுதிக்கு நீர் திறப்பது இல்லை. இதனால் மஞ்சளாறு பாசனத்தை கொண்டு வத்தலக்குண்டு விவசாயிகள் இரண்டு ஆண்டுகளாக விவசாயம் செய்ய முடியவில்லை. கொடைக்கானல் மலையில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்வதால், மஞ்சளாறு அணை 40 அடியை எட்டியுள்ளது. இந்த நீரை பழைய வத்தலக்குண்டு கண்மாய் வரை திறந்து விட்டால் 500 ஏக்கர் நிலம் பயன்அடையும். நூற்றுக்கணக்கான கிணறுகள், வழிப்பாதையில் உள்ள கண்மாய், குட்டைகள் நிரம்பும். பொதுப்பணித்துறை அதிகாரிகள் விவசாயத்திற்கு மஞ்சளாறு அணையை திறக்க விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்.

## 1.35லட்சம் மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி

ஸ்ரீவில்லிபுத்தூர் : ஸ்ரீவில்லிபுத்தூர் கோட்டத்தில், 1.35லட்சம் மாடுகளுக்கு ,கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி நடந்து வருகிறது.வடகிழக்கு பருவமழை அக்டோபரில் துவங்கும் முன், தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. ஸ்ரீவில்லிபுத்தூர் கோட்டத்திற்குட்பட்ட ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு, சிவகாசி,

வெம்பக்கோட்டை, சாத்தூர் ஒன்றிய பகுதிகளிலுள்ள 1.35 லட்சம் மாடுகளுக்கு இந்த தடுப்பூசி போடும் பணி ,கடந்த 1ம்தேதி துவங்கியது. 21ம் தேதி வரை நடக்கிறது. ஒன்றியத்திற்கு 12 பேர் கொண்ட குழுவினர் நியமிக்கப்பட்டு, பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இத்தகவலை, ஸ்ரீவி., கோட்ட உதவி இயக்குனர் சஞ்சீவிராஜ் தெரிவித்தார்.

## தென்னை நார்கழிவில் இயற்கை உரம்; விவசாயிகள் ஆர்வம்

பெரியகுளம் : தென்னை நார்கழிவை இயற்கை சுழற்சி மூலம் பயனுள்ள உரமாக மாற்றி, நிலங்களுக்கு பயன்படுத்துவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.பெரியகுளம் மற்றும் ஒன்றியப் பகுதியில் நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலப்பரப்பில் தென்னை பயிரிடப்பட்டுள்ளது. தேங்காயிலிருந்து எண்ணெய், மட்டையிலிருந்து கயிறு உள்பட தென்னையில் அனைத்து பகுதிகளும் உபயோகமாகிறது. பெரியகுளம், கள்ளிப்பட்டி, கைலாசபட்டிபகுதியில் மட்டையிலிருந்து கயிறு தயாரிக்கப்பட்டுகடைசியாக நார்கழிவுகளை வீணாக்குகின்றனர்.நார் கழிவுகளை தீயிட்டு கொளுத்துவதால் சுற்றுப்புறச் சூழல் மாசுபடுகிறது.பெரியகுளம் பகுதியில் விவசாயிகள் சிலர், வீணாகும் நார்கழிவுகளை இயற்கை உரமாக பயன்படுத்துகின்றனர். இதனால் மண்ணின் நீர்பிடிப்பு தன்மையை அதிகரிக்க செய்யலாம். ஒரு எக்டேர் பரப்பளவு கொண்ட தென்னையிலிருந்து ஆயிரம் முதல் ஆயிரத்து 500 வரை மட்டைகள் கிடைக்கிறது. இவற்றிலிருந்து ஒரு டன் எடையுள்ள நார்கழிவுகள் கிடைக்கும். இந்த நார்கழிவுகளை, சிப்பிக்காளான் பயன்படுத்தி,சத்துமிக்க இயற்கை உரம் தயாரிக்கலாம். என விவசாயிகள் தெரிவித்தனர்.

## ஆப்பிள் வரத்து துவங்கியது; திராட்சை விலை குறைந்தது

கம்பம் : ஆப்பிள் வரத்து துவங்கியுள்ளதால், திராட்சை விலை குறைந்துள்ளது. சமீபத்தில் பெய்து வரும் சாரல், ஈரப்பதம் உள்ள காற்றால், திராட்Øகு பெரிய அளவில் பாதிப்பு இல்லாதது விவசாயிகளுக்கு ஆறுதலை தந்துள்ளது.உலக அளவில் திராட்சை சாகுபடியில் இந்தியா முக்கிய இடம் பிடித்துள்ளது. மகாராஷ்டிரா புனே

பகுதியில் ஏற்றுமதி தரம் மற்றும் ஒயின் தயாரிக்க பயன்படும் திராட்சை சாகுபடி செய்யப்படுகிறது. இதற்கடுத்து தமிழ்நாட்டில் திராட்சை அதிக பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது. ஆண்டுமுழுவதும் திராட்சை கிடைக்கும் பகுதி என்ற பெயரை தேனி மாவட்டம் பெற்றுள்ளது. ஆண்டிற்கு மூன்று முறை அறுவடை செய்யப்படுகிறது.பொதுவாக கோடைகாலங்களில் திராட்Øகு நல்ல விலை கிடைக்கும். மழை மற்றும் பனி காலங்களில் விலை கிடைக்காது.மேலும் இக் காலங்களில் திராட்சையில் செவட்டை, சாம்பல் போன்ற நோய்கள் தாக்கும். காற்றின் ஈரப்பதம் அதிகரிக்கும் போது திராட்சை தாக்குபிடிக்காது. தற்போது காஷ்மீர், இமாச்சல்பிரதேசம்,சிம்லா போன்ற இடங்களில் இருந்து ஆப்பிள் வரத்து துவங்கியுள்ளது.இதனால் திராட்கு விலை கிடைப்பது குறைந்துள்ளது. திராட்சை கிலோ 20 ரூபாய்க்கு கிடைக்கிறது. கடந்த மாதம் இதே நேரத்தில் கிலோவிற்கு60 ரூபாய் வரை கிடைத்தது. திராட்சை விவசாயிகள் கூறுகையில்,""ஆப்பிள் வரத்து ஆரம்பித்து விட்டதால், திராட்Øகு "கிராக்கி' குறைந்துள்ளது.மேலும் மழை காலங்களில் அதிக விற்பனை இருக்காது. சாரல் மழை மற்றும் ஈரப்பதம் அதிகம் உள்ள காற்று வீசிய போதும், திராட்சையில் செவட்டை உள்ளிட்ட எந்தவித நோய்களும் தாக்கவில்லை.இது விவசாயிகளுக்கு பெரிய அளவில் நிம்மதியை தந்துள்ளது"என்றனர்.

## <u>கால்நடைகளுக்கு வாய்க்காணை நோய் தடுப்பூசி முகாம்; செப்.14 வரை நடக்கிறது</u>

தேனி : தேனி மாவட்டத்தில் கால்நடைகளுக்கு ஏற்படும் வாய்காணை நோயை தடுப்பதற்கு தடுப்பூசி முகாம் இன்று(ஆக.8) துவங்கி இம் மாதம் 14 ம் தேதி வரை நடக்கிறது.தேனி மாவட்டத்தில் உள்ள அனைத்து நகராட்சி, பேரூராட்சி மற்றம் கிராம பஞ்சாயத்துகளில் இன்று முதல் (செப்., 8) செப்.14 வரை கால்நடைகளுக்கு ஏற்படும் கால் மற்றும் வாய்க்காணை நோயை தடுப்பதற்காக தடுப்பூசிப்பணிகள் மேற்கொள்ளப்படஉள்ளன.இந்நோய் தாக்கத்தினால் நம் நாட்டில் கலப்பின மாடுகளின் வாயில் உட்பகுதி நாக்கு, கால்குளம்புகளின் நடுப்பகுதி மற்றும் மடி ஆகிய இடங்களில் கொப்பளங்கள் தோன்றி பின்பு அவை உடைந்து ரணமாக மாறுவது கோமாரி நோயின்

அறிகுறியாகும்.இந்த நோய் தாக்கினால் மாடுகள் இறப்பு குறைவாக இருந்தாலும், கால்நடைவளர்ப்போருக்கு பொருளாதார இழப்பு அதிகமாக இருக்கும். எனவே அனைத்து நகராட்சி,பேரூராட்சி மற்றும் கிராமங்களில் விளம்பரம் செய்யும் இடங்களுக்கு அழைத்து சென்று தடுப்பூசி போட்டுக்கொள்ளுமாறும், தடுப்பு நடவடிக்கைகள் குறித்து தெரிந்து கொள்ளுமாறும், கலெக்டர் பழனிசாமி வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## பேச்சிப்பாறை அணை 18 அடி உயர்வு

நாகர்கோவில்: கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த 16 நாட்களாக தொடர்ச்சியாக மழை பெய்து வந்தது. இதனால் மாவட்டத்தில் உள்ள 1278 குளங்கள் நிரம்பியது. 354 குளங்கள் நிரம்பும் தருவாயில் உள்ளது. கடந்த 21-ம் தேதி பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 9.50 அடியாகவும், பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 43.40 அடியாகவும் இருந்தது. கடந்த 16 நாட்கள் மழையில் பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 18 அரை அடி உயர்ந்து 27 .80 அடியாக உள்ளது. இதுபோல பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 43.40 அடியாக இருந்தது. தற்போது இது 70.35 அடியாக உள்ளது. தொடர் மழையால் கல்குளம் தாலுகாவில் 14 வீடுகளும், அகஸ்தீஸ்வரம் தாலுகாவில் 5 வீடுகளும், தோவாளை தாலுகாவில் 13 வீடுகளும், விளவங்கோடு தாலுகாவில் 4 வீடுகளும் சேதம் அடைந்துள்ளது.

## விவசாயிகளுக்கு விதை விநியோகம்

மத்திய தீவன உற்பத்தி செயல் விளக்கப் பயிற்சிக் கூட்டத்தில் விவசாயிகளுக்கு விதைகள் வழங்கப்பட்டன. கரூர் அருகே சின்னதாராபுரம் ஊராட்சி புளியம்பட்டியில் மத்திய தீவன உற்பத்தி குறித்து செயல் விளக்க பயிற்சி கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றது. வினோபா சங்கச் செயலர் செல்லமுத்து வரவேற்றார். கால்நடைப் பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் குழந்தைசாமி தலைமை வகித்து தொடங்கி வைத்தார். மருத்துவர் மோகன்ராஜ் முன்னிலை வகித்தார். திட்ட இயக்குநர் (பொ) அஜித்குமார் யாதோவ், பண்ணை மேலாளர் ஸ்ரீகாந்த்திருவேலி, ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீபன் ஆகியோர் பயிற்சி

குறித்து விளக்கினர். 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர். அவர்களுக்கு விதைகள் வழங்கப்பட்டன.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தலை முதல் கால் வரை கருப்பு அரிய வகை சேவல் விலை 1.5 லட்சம்**

நியூயார்க்: அமெரிக்காவில் அரிய வகை கருப்பு சேவலுக்கு ரூ.1.5 லட்சம் விலை வைக்கப்பட்டுள்ளது. இறைச்சியும் கருப்பு நிறத்தில் இருப்பதால் இவ்வளவு விலை என்கிறார் கோழி பண்ணையாளர். இந்தோனேசியாவை பூர்வீகமாக கொண்ட கருப்பு சேவல்கள், தற்போது அரிய வகை இனமாக உள்ளன. மத்திய ஜாவாவிலும் சீனாவிலும் தற்போது காணப்படுகின்றன. இந்த சேவலின் தலை முதல் கால் வரை அனைத்துமே கருப்புதான். இரவு நேரத்தில் வெளிச்சம் படும் போது கரும்பச்சை நிறத்தில் ஜொலிக்கிறது. இந்த சேவல், வெளிப்புறத்தில் எப்படி முற்றிலும் கருப்பு நிறத்தில் இருக்கிறதோ, அதேபோல் அதன் உள்உறுப்புகள் அனைத்தும் கருப்பு நிறத்தில்தான் இருக்கின்றன. இத்தகைய அரிய வகை கருப்பு சேவல்கள், அமெரிக்காவில் புளோரிடா மாநிலத்தில் உள்ள கிரீன்பீல்டு கோழி பண்ணையில் நேற்று முன்தினம் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது. ஒரு சேவலின் விலை ரூ.1.5 லட்சம். ஜோடியாக வாங்கினால் விலை தள்ளுபடி உண்டு என்கிறார் கோழி பண்ணை உரிமையாளர். இந்த கருப்பு சேவல் பார்ப்பதற்கு அழகாகவும் கவர்ச்சியாகவும் காணப்படுகிறது. அத்துடன் இதன் முட்டை மற்றும் இறைச்சி அதிக புரோட்டீன் சத்து நிறைந்தது. இதை இனப்பெருக்கம் செய்வதற்காகவும், அதன் கருப்பு நிற மாமிசத்துக்காகவும் நான் ஒரு ஜோடி பறவையை அதிக விலை கொடுத்து வாங்கி இருக்கிறேன் என்று டானா கோவின் என்ற பெண் பெருமையுடன் கூறினார். மொத்தத்தில், இந்த கருப்பு நிற சேவல் தனது

அழகான தோற்றத்திலும் விலையிலும் அமெரிக்க மக்களை கவர்ந்து வருகிறது.

**<u>நிலத்தடி நீர்மட்டத்தை பெருக்க ஏரிகளை சீரமைக்க திட்டம்</u>**

சென்னை: தமிழக முழுவதும் வறட்சி மாவட்டங்களில் உள்ள பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டத்தை பெருக்குவதற்காக மத்திய அரசின் 'ஆர்ஆர்ஆர்' திட்டத்தின் கீழ் ஏரிகளை சீரமைக்க பொதுப்பணித்துறை திட்டமிட்டுள்ளது. இதற்காக முதற்கட்டமாக வறட்சி மாவட்டங்களில் உள்ள ஏரிகளை கணக்கெடுக்கும் பணியை பொதுப்பணித்துறை தொடங்கியுள்ளது. தமிழகம் முழுவதும் 39 ஆயிரத்து 202 ஏரிகள் உள்ளன. இதில், நீர் வள ஆதாரத்துறையின் கட்டுப்பாட் டின் கீழ் 13 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏரிகள் உள்ளன. மற்றவை ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த ஏரிகளில் தூர்வாரும் பணி மேற்கொள்ளப்படாததால் ஆண்டுக்கு 250 டிஎம்சி தண்ணீர் சேமித்து வைக்க முடியாமல் வீணாகிறது. இதனால் நிலத்தடி நீர் மட்டம் குறைவது மட்டுமின்றி, விவசாயத்திற்கும் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த பிரச்சனையை தீர்க்கும் வகையில் ஏரிகளின் முழு கொள்ளளவை மேம்படுத்துவதும், கூடுதல் கொள்ளளவை உருவாக் குவதும், ஏரிகளின் கரை களை உரிய தரத்திற்கு பலப்படுத்துதல், தூர்வாருதல் போன்ற பணிகளை மேற்கொள்ள பொதுப்பணித்துறை முடிவு செய்தது. அதன்படி நீர்நிலைகளை சீரமைத்து, புனரமைக்கும் (ஆர்ஆர்ஆர்) திட்டத்தின் கீழ் மத்திய அரசு 90%, மாநில அரசு 10% என்ற அடிப்படையில் இப்பணி மேற்கொள்ளப்படுகிறது. முதற்கட்டமாக வறட்சி மாவட்டங்களான ராமநாதபுரம், சிவகங்கை, புதுக் கோட்டை, வேலூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, பெரம்பலூர், அரியலூர் போன்ற பகுதிகளில் நிலத் தடி நீர்மட்டத்தை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதுகுறித்து, பொதுப்பணித்துறை உயர் அதிகாரி ஒருவர் கூறும்போது, "நீர்வள ஆதாரத்துறையில் பெரிய அளவிலான திட்டங்கள் என்றால் மத்திய அரசின் நிதி உதவி மூலம் நிறைவேற்றப்படுவது வழக்கம். அந்த வகையில், நடப்பாண்டில் தமிழகம் முழுவதும் ஆர்ஆர்ஆர் திட்டத்தின்

கீழ் 1000 ஏரிகளை சீரமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது முதற்கட்டமாக 49 ஏரிகளை சீரமைக்கப்படவுள்ளது. இதற்காக மத்திய அரசிடம் கோரப்பட்டுள்ள நிலையில் நிதி கிடைத்தவுடன் ஏரிகளை புனரமைக்கும் பணிகளை மேற் கொள்ள திட்டமிட்டுள்ளோம்'' என்றார்.

**<u>தமிழகத்தில் இடியுடன் மழை: மணிக்கு 55 கிமீ வேகத்தில் காற்று வீசும்</u>**

சென்னை: மகாராஷ்ட்ராவில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி அங்கு கனமழை பெய்து வருகிறது. அதன் தொடர்ச்சியாக தமிழகத்தில் ஏற்பட்டுள்ள காற்றுசுழற்சியால் இன்று தமிழகம் புதுச்சேரியில் பரவலாக மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென்மேற்கு பருவமழை கேரளாவில் பெய்து வருவதை தொடர்ந்து மகாராஷ்ட்ராவில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளது. அதனால் அங்கு கனமழை பெய்து வருகிறது. இந்நிலையில், கர்நாடகா, ஆந்திர, தெலுங்கானா மாநிலங்களிலும் மழை பெய்து வருகிறது. இந்நிலையில் தமிழகத்தில் நேற்று வெப்ப சலனம் ஏற்பட்டு பரவலாக மழை பெய்தது. அதிகபட்சமாக நீலகிரி மாவட்டம் தேவாலா, நடுவட்டம் ஆகிய இடங்களில் 20 மிமீ மழை பெய்துள்ளது. சின்ன கல்லார் வால்பாறை ஆகிய இடங்களில் 10 மிமீ மழை பெய்துள்ளது. சென்னையில் நேற்று மதியம் தொடங்கி மாலை வரை ஆங்காங்கே மழை பெய்தது. சென்னை மீனம்பாக்கம், நுங்கம் பாக்கம் ஆகிய இடங்களில் 10 மிமீ அளவுக்கு மழை பதிவாகியுள்ளது. இந்த திடீர் மழை காரணமாக சென்னையில் பெரும்பாலான இடங்களில் சாலைகளில் மழை நீர் தேங்கி குளம்போல காட்சி அளித்தது. ஆட்டோ இருசக்கர வாகனங்கள் அந்த சாலைகளில் செல்ல முடியாமல் திணறின. முக்கிய சாலைகளில் மெட்ரோ ரயில் மேம்பாலம் அமைக்கும் பணி நடக்கும் இடங்களில் மழை நீர் தேங்கியதால் பஸ் உள்ளிட்ட கனரக வாகனங்கள் செல்ல முடியாமல் திணறின. இதனால் பல சாலைகளில் நேற்று மதியம் கடும் போக்கு வரத்து பாதிப்பு ஏற்பட்டது. ஒரு சில இடங்களில் சாலைகளில் மரங்கள் முறிந்து விழுந்தன. இந்நிலையில், வளி மண்டல மேல் அடுக்கில் காற்று சுழற்சி ஏற்பட்டுள்ளது. இது வங்கக் கடல் பகுதியில் இருந்து கேரளா

வரை பரவியுள்ளதால் இன்றும் தமிழகம் புதுச்சேரியில் பரவலாக மழை பெய்யும். வட மாவட்டங்களில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகியவற்றில் கனமழை பெய்வதற்கான வாய்ப்புள்ளது. மேலும், இன்று தென்மேற்கு திசையில் இருந்து மணிக்கு 45 கிமீ முதல் 55 கிமீ வேகத்தில் காற்று வீசும், அதனால் கடலில் அலையின் சீற்றம் அதிகமாக இருக்கும்.

**உரங்களுக்கான மானியம் 41 சதவீதம் குறைவு**

புதுடெல்லி : உர நிறுவனங்களுக்கு வழங்கப்படும் மானியம் கடந்த ஏப்ரல்-ஜூன் காலாண்டில் சுமார் 41% குறைந்துள்ளது. இந்த காலக்கட்டத்தில் ரூ.21,300 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டின் இதே காலக்கட்டத்தில் வழங்கப்பட்ட மானியம் ரூ.36,000 கோடியாகும். பாஸ்பேட், பொட்டாஷ் உரங்களுக்கு நிலையான உர மானியம் நிர்ணயிக்கப்பட்டதோடு, நிறுவனங்கள் விலையை நிர்ணயித்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. அதேநேரத்தில் விலை கட்டுக்குள் இருக்கும் வகையில் அரசு கண்காணித்து வருகிறது என துறை சார்ந்த அதிகாரிகள் கூறினர்.

**ஓணம் பண்டிகைக்கு தோவாளை மார்க்கெட்டில் ரூ.3 கோடிக்கு பூக்கள் விற்பனை**

ஆரல்வாய்மொழி : ஓணம் பண்டிகையையொட்டி தோவாளை பூ மார்க்கெட்டில் பூக்களின் விலை கிடு கிடு என அதிகரித்தது.குமரி மாவட்டம் தோவாளையில் அமைந்துள்ள பூ மார்க்கெட்டுக்கு பல்வேறு மாவட்டங்களில் இருந்து பூக்கள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. இங்கிருந்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும், கேரளாவுக்கும் பூக்கள் விற்பனைக்கு செல்கிறது. ஓணம் பண்டிகைக்கு வீடுகளிலும் பொது இடங்களிலும் பல வண்ண பூக்களால் அத்தப்பூ கோலம் போடுவது வழக்கம். இதனால் கேரளாவில் ஓணம் பண்டிகை துவங்கியதில் இருந்து பூக்களின் விலை உயர்ந்த வண்ணம் உள்ளது.நேற்று ஓணம் பண்டிகை என்பதால் நேற்று முன்தினமே விற்பனை பரபரப்பாக நடந்தது. கேரள பூ வியாபாரிகள் ஏராளமானோர் குவிந்தனர்.பூக்கள் விலை ஒரு கிலோ அடிப்படையில்: மல்லி, முல்லை, பிச்சி பூக்கள் ரூ.600, அரளி ரூ.250, சேலம் அரளி ரூ.150, ரோஸ் ஒரு

பாக்கெட்ரூ.50, பட்டன் ரோஸ் ரூ.250, ஸ்டார் ரோஸ் ரூ.200, சம்பங்கி ரூ.150, துளசி ரூ.30, மரிக்கொழுந்து ரூ.100, ஆரஞ்சு கிரேந்தி ரூ.110, வாடமல்லி ரூ.50, கோழிகொண்டை ரூ.40 என விற்பனையானது. சுமார் 3 கோடி ரூபாய்க்கு மேல் வியாபாரம் நடந்துள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.கடந்த ஆண்டை விட விலை குறைவுகடந்த ஓணம் சீசன் விலையை ஒப்பிடும்போது இந்த சீசனில் விலை மிகவும் குறைவாகவே உள்ளது. கடந்த சில மாதங்களாக பிச்சிப்பூ உற்பத்தி அதிகரித்ததால் தோவாளை மார்க்கெட்டில் மல்லி, முல்லை பூக்களின் விலையிலும் சரிவு ஏற்பட்டது. வழக்கமாக இந்த மாதம் பூ உற்பத்தி குறைவாக இருக்கும். ஆனால் ஆனி, ஆடி பருவ மழை தாமதமாக பெய்ததால் இந்த மாதமும் பூக்களின் உற்பத்தி அதிகரித்தது.இதனால் பூ மார்க்கெட்டில் பூக்களின் வரத்தும் அதிகரித்தது. மேலும் கேரளாவில் தற்போது பலத்த மழை பெய்வதால் அங்கிருந்து வரும் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கையும் குறைந்துள்ளது. இதுவும் விலை குறைய ஒரு காரணமாகியுள்ளது. இது குறித்து வியாபாரிகளிடம் கேட்டபோது கடந்த ஆண்டை விட விலை குறைவாக இருந்தாலும் வரத்து அதிகமாக இருந்ததால் வியாபாரிகளுக்கு பாதிப்பு இல்லை. ஆனால் எதிர்பார்த்த அளவிற்கு விற்பனை இல்லை என்றும் தெரிவித்தனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>தர்மபுரி மாவட்டத்தில் கத்திரி விளைச்சல் அமோகம்</u>**

தர்மபுரி, : தர்மபுரி மாவட்டத்தில் நடப்பா ண்டில் கத்திரி விளைச்சல் அதிகரித்துள்ளது.தர்மபுரி மாவட்டத்தில் தக்காளிக்கு அடுத்தபடியாக பல ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் சாம்பார் பூசணி, சாம்பார் வெள்ளரி, கத்தரி, வெண்டைக்காய் உள்ளிட்ட காய்கறிகள் விளைவிக்கப்படுகிறது. தர்மபுரி அடுத்த சோகத்தூர் பகுதியில் சுமார் 2 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கத்திரி சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். இது குறித்து விவசாயிகள் கூறும் போது, சோகத்தூர் பகுதியில்

ஆயிரக்கணக்கான ஏக்கரில் கத்திரிக்காய் பயிரிட்டுள் ளாம்.கடந்த தை ம தம் 40 சென்ட் நிலத்திலும் கத் திரி செடி நடவு செய்தோம். 3 மாதத்திற்கு பின்னர் சித்திரை மாதத்தில் இருந்து கத்திரி காய்பிடிக்க ஆரம்பித்துவிட்டது. வாரந்தோ றும் 400 கிலோ அறுவடை செய்கிறோம். ஒரு கிலோ கத்திரிக்காய் கடந்த வாரம்ரூ20க்குமொத்த விலை மதிப்பில் விற்பனையானது.கடந்த மாதத்திற்கு முன்புரூ35வரை விற்பனையானது. ஓசூர் பகுதியில் இருந்து வியாபாரிகள் எங்கள் நிலத்திற்கே வந்து கத்திரியை வாங்கி செல்கின்றனர். முறையாக மருந்து அடித்து பராமரித்தால் ஒரு சென்ட் நில த்தில் 10 கிலோ வரை கத்தி ரி அறுவடை செய்ய முடியு ம். நடப்பாண்டில் ஓரளவிற்கு நல்ல மழை பெய்துள்ளது. இதனால் விளை ச்சலும் அதிகரித்துள்ளது என்றார்.

## <u>மார்க்கெட்டில் குவிந்தது வாழைத்தார்; உயர்ந்தது விலை</u>

பொள்ளாச்சி, : பொள்ளாச்சி காந்தி தினசரி மார்க்கெட்டில் வியாழக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் வாழை இலை ஏலம் நடக்கிறது. ஆனைமலை, கோட்டூர், பொன்னாபுரம், வடக்கிபாளையம், அம்பராம்பாளையம், நெகமம், பழனி, ஒட்டன்சத்திரம், தென்காசி, தூத்துக்குடி பகுதிகளில் இருந்து விவசாயிகள் வாழைத்தார் மற்றும் இலைக்கட்டுகள் கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். சமீபத்தில் பெய்த பருவமழையால், காரணமாக மார்க்கெட்டுக்கு வாழை இலை வரத்து அதிகமாக இருந்தது. நேற்று ஓணம் பண்டிகை என்பதால், காலையில் நடந்த ஏலத்தின்போது மார்க்கெட்டுக்கு சுமார் 1000 இலைகட்டுகள் வரப்பெற்றன. வரத்து அதிகமாக இருந்தாலும் ஓணம் மற்றும் முகூர்த்த நாள் என்பதால் அதிக விலைக்கு ஏலம் போனது. கடந்த மாதம் 100 எண்ணம் கொண்ட ஒரு இலை கட்டு ரூ.600 முதல் அதிகபட்சமாக ரூ.850 வரை விற்கப்பட்டது. நேற்று ஒரு கட்டு இலை (பெரியது) ரூ.1350 முதல் ரூ.1800 வரையிலும், சிறிய கட்டு ரூ.1000 முதல் ரூ.1200க்கும் ஏலம்போனது.அதுபோல் வாழைத்தார் வரத்தும் அதிகமாக இருந்தது, விஷேச நாட்கள் தொடர்ந்து இருப்பதால் வாழைத்தாருக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது. கடந்த மாதம் பூவந்தார் ஒன்று அதிகபட்சமாக ரூ.380க்கு விற்பனையானது. நேற்று நடந்த

ஏலத்தில் பூவந்தார் ஒன்று ரூ.580 வரை ஏலம்போனது. அதேபோல் செவ்வாழை, நேந்திரன், மோரீஸ், ரஸ்தாளி, கேரள ரஸ்தாளி உள்ளிட்ட அனைத்து வாழைத்தார் ரகங்களும் அதிக விலைக்கு ஏலம்போனது.

## தொடர் மழையால் வனப்பகுதி சிற்றருவிகளில் சீறிப்பாயும் வெள்ளம்

பொள்ளாச்சி, : பொள்ளாச்சியை அடுத்த மேற்குத்தொடர்ச்சி மலை பகுதியில், தொடர்ந்து பெய்து வரும் மழையால் வனப்பகுதிகளில் உள்ள சிற்றருவிகளில் வெள்ளம் சீறிப்பாய்கிறது.பொள்ளாச்சியை அடுத் த மேற்குத்தொடர்ச்சி மலை பகுதியில் கடந்த பிப்ரவரி மாதம் முதல் மே மாதம் வரை கடும் வறட்சி நிலவியது. இதன் காரணமாக ஆனைமலை புலிகள் காப்பகத்திற்குட்பட்ட வனப்பகுதிகளில் உள்ள நீரோடைகள் தண்ணீர் இன்றி வறண்டு காணப்பட்டது. மே மாத இறுதியில் சில நாட்கள் பெய்த மழையால் சிற்றருவிகள், நீரோடைகளில் சிறிதளவு தண்ணீர் செல்லத் துவங்கியது.அதன்பிறகு கடந்த ஜூலை மாத துவக்கத்தில் பருவமழை பெய்யத் துவங்கியது. தொடர்ந்து 2 மாதங்களாக இந்த மழை நீடித்தது. இதில் தற் போதும் அவ்வப்போது மழை பெய்து கொண்டிருக்கிறது. இத் தொடர் மழையால் வனப்பகுதியில் உள்ள அருவி, நீரோடைகளில் தண்ணீர் அதிகளவு வரத் துவங்கியுள்ளது. கடந்த சில வாரங்களாக தொடர்ந்து பெய்த மழையால் மலை முகடுகளில் இருந்து தண்ணீர் பெருக்கெடுத்து வருகிறது. ஆங்காங்கே புதிதாக சிற்றருவிகளும் உருவாகியுள் ளன. அதேபோல் குரங்கு அருவியிலும் கடந்த சில வாரங்களாக தண்ணீர் அதிகளவு கொட்டுகிறது. இதனால் இங்கு வரும் சுற்றுலா பயணிகள் அருவியில் குளித்து மகிழ்கின்றனர். ஆழியாரில் இருந்து நவ மலை செல்லும் பகுதியில் உள்ள சிற்றருவிகள், நீரோடைகளில் வெள்ளம் சீறிப்பாய்கிறது. பரம்பிக்குளம் பகுதியில் பெய்யும் மழை நீர் சர்க்கார்பதி நோக்கி வருகிறது. இங்குள்ள நீர் மின்நிலையம் அருகேயும் சிற்றருவியில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது.

**<u>நகர்ப்புற தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம் துவங்க தொடர்பு கொள்ளலாம்</u>**

கோவை, : கோவையில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் நகர்புற தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம் துவங்க விருப்பம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளலாம் என தோட்டக்கலை துணை இயக்குனர் தெரிவித்துள்ளார். கோவை மாவட்டத்தில் நகர்புறங்களில் வாழும் மக்கள் தமக்கு தேவையான காய்கறிகளை தாமே பயிரிட்டு கொள்ள தமிழக அரசு நகர்புற தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தை செயல்படுத்த ஆணை பிறப்பித்துள்ளது. இத்திட்டம் தற்போது கோவை மாவட்டத்தில் செயல்பாட்டில் உள்ளது. காய்கறிகளை எளிய முறையில் வீட்டின் மேல் வளர்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். வீட்டின் மேல்தளத்தில் தோட்டம் அமைப்பதற்காக இடுபொருள்கள் மற்றும் தொழில்நுட்ப கையேடும் பயனாளிகளுக்கு 50 சதவீத மானியத்தில் ரூ1,352க்கு தோட்டக்கலை துறையால் வழங்கப்பட்டு வருகிறது. ஒரு தளை மூலம் தோட்டம் அமைக்க 16 ச.மீ இடம் போதுமானது. ஒவ்வொரு பயனாளிகளும் 5 தளைகள் வரை அதிகபட்சமாக பெறமுடியும். இத்திட்டத்தின் தனி சிறப்பாக பத்து வகையான காய்கறி விதைகள் வழங்கப்பட்டு வருகிறது. இத்துடன் காய்கறி செடிகளை வளர்ப்பதற்கு தென்னை நார் கழிவு கட்டியுடன் கூடிய 20 பாலிதீன் பைகள் வழங்கப்படவுள்ளது. இவை எடை குறைவாகவும் மற்றும் கையாளுவதற்கு எளிதாகவும் இருக்கும். தரையில் விரிக்கப்படும் பாலிதீன் விரிப்புகள் வீட்டினுள் நீர்கசிவு ஏற்படாமல் இருக்க தடுக்கிறது. நீரில் எளிதாக கரையும் உரங்களை பயன்படுத்துவதால் செடிகள் செழிப்பாக வளரும். இயற்கை முறையிலான பூச்சிகொல்லி மற்றும் பூஞ்சான கொல்லிகள் பயன்படுத்துவதால் நஞ்சற்ற காய்கறிகளை விளைவிக்கலாம். இவைகளுடன் பிளாஸ்டிக் கைத்தெளிப்பான், பிளாஸ்டிக் பூவாலி, மண் அள்ளும் கருவி, மண்கிளரும் கருவி ஆகியவைகளும் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது கோவை நகரில் தோட்டக்கலை துறையால் ஏற்பாடு செய்யப்பட்ட 4 வாகனங்கள் மூலம் இத்திட்டத்தின் இடுபொருள்கள் பயனாளிகளின் இல்லத்திற்கு நேரடியாக கொண்டு சேர்க்கப்படுகிறது. இத்திட்டம் துவங்க ஆர்வமுள்ள சிங்காநல்லூர், ஒண்டிப்புதூர், பீளமேடு, போத்தனூர், சூலூர் பகுதியினர்

99655-62700, 97864-86143. சர்க்கார் சாமக்குளம், காளப்பட்டி, சரவணம்பட்டி, காந்திபுரம், கணபதி பகுதியினர் 95784-52676, 97875-55692. ஆர்.எஸ்.புரம், பி.என்.புதூர், ராமநாதபுரம், வடவள்ளி, தொண்டாமுத்தூர் பகுதியினர் 97919-98833, 96598-52087. சாய்பாபா காலனி, பெரியநாயக்கன்பாளையம், கவுண்டர் மில், துடியலூர் பகுதியினர் 95245-89749, 94888-36480 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என தோட்டக்கலை துணை இயக்குனர் தெரிவித்துள்ளார்.

**<u>ஓசூர் கோட்டத்தில் விவசாய மின் இணைப்பு விண்ணப்பதாரர்களுக்கு அழைப்பு</u>**

ஓசூர், : ஓசூர் கோட்டத்தில் விவசாய மின் இணைப்பு வழங்கும் நடவடிக்கைக்காக உரிய ஆவணங்களை சரிபார்க்குமாறு விண்ணப்பதாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.இதுகுறித்து ஓசூர் மின்வாரிய செயற்பொறியாளர் ராமச்சந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கை:ஓசூர் கோட்டத்தைச் சேர்ந்த விவசாய மின் இணைப்பு விண்ணப்பதாரர்களுக்கு 2014&2015ம் ஆண்டிற்காக இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, சாதாரண வரிசை திட்டத்திற்கு 31.03.2012 வரை தயார் நிலை பதிவு செய்தவர்களுக்கும், ரூ.10 ஆயிரம் சுயநிதி திட்டம் வரையில் 01.10.2000 முதல் 31.12.2001 வரை விண்ணப்பித்தவர்களுக்கு மட்டும் வழங்கப்படுகிறது. ரூ.25 ஆயிரம் சுயநிதி திட்டத்தில் 30.09.2008 வரை ரூ.500 செலுத்தியவர்களுக்கும், ரூ.50 ஆயிரம் சுயநிதி திட்டத்தில் 31.12.2012 வரை ரூ.500 செலுத்தியவர்களுக்கு மட்டும் வழங்கப்படுகிறது.எனவே இந்த இலக்கிற்குள் வரக்கூடிய விவசாய மின் இணைப்பு விண்ணப்பதாரர்கள், அவர்களின் பிரிவு அலுவலகத்தை அணுகி, வருவாய் ஆவணங்களை சமர்பித்து மின் இணைப்பு பெற்று பயன் பெறலாம்.இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறியுள் ளார்.

**<u>பிஏபி 2ம் மண்டல பாசனத்துக்காக திருமூர்த்தி அணையில் தண்ணீர் திறக்கப்பட்டது</u>**

உடுமலை, : கோவை, திருப்பூர் மாவட்ட பிஏபி 2ம் மண்டல பாசனத்துக்காக திருமூர்த்தி அணையில் இருந்து பிரதான கால்வாயில்

நேற்று தண்ணீர் திறக்கப்பட்டது. இதன் மூலம் சுமார் 94 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.திருப்பூர் மாவட்டம் உடுமலை அருகே திருமூர்த்தி அணையில் இருந்து கோவை, திருப்பூர் மாவட்டங்களில் 3.75 லட்சத்துக்கும் மேற்பட்ட நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இந்த நிலங்கள் 4 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு சுழற்சி அடிப்படையில் தண்ணீர் வினியோகம் செய்யப்படுகிறது. தற்போது 2ம் மண்டல பாசனம் நடைபெற உள்ளது. இதற்கு கடந்த ஆகஸ்ட் மாதமே தண்ணீர் திறக்க வேண்டும். ஆனால், பருவமழை பொய்த்து பிஏபி அணைகளில் போதிய தண்ணீர் இல்லாததாலும், கான்டூர் கால்வாயில் பராமரிப்பு பணிகள் நடந்ததாலும் குறித்த காலத்தில் தண்ணீர் திறக்கப்படவில்லை. தற்போது, பருவமழை பொழிந்து அணைகள் நிரம்பி விட்டன. கான்டூர் கால்வாய் பராமரிப்பு பணியும் முடிந்தது. இதை தொடர்ந்து, பரம்பிக்குளம் அணையில் இருந்து கான்டூர் கால்வாயில் கடந்த 20ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. 60 அடி நீர்மட்டம் கொண்ட அணையில் தற்போது 56 அடி தண்ணீர் உள்ளது. இந்நிலையில், தமிழக முதல்வரின் உத்தரவின் பேரில், திருமூர்த்தி அணையில் இருந்து பிரதான கால்வாயில் நேற்று காலை 9 மணிக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. மாவட்ட கலெக்டர் கோவிந்தராஜ் கலந்து கொண்டு அணை மதகுகளை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், கண்காணிப்பு பொறியாளர் இளங்கோவன், பொள்ளாச்சி செயற்பொறியாளர் செல்வராஜ், உதவி செயற்பொறியாளர்கள் ஜெயசீலன், செல்லமுத்து, ராதாகிருஷ்ணன், உதவி பொறியாளர் பாபு மற்றும் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர். திருமூர்த்தி அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டதன் மூலம் சுமார் 94 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

## ஆலங்குடியில் இன்று கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

ஆலங்குடி, : ஆலங்குடியில் இன்று கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி முகாம் நடைபெறுகிறது.புதுக்கோட்டை மாவட் டம், ஆலங்குடியில் இன்று முதல் 2 நாட்களுக்கு கால்நடைகளுக்கான கோமாரி நோய்த் தடுப்பு முகாமுக்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இதுகுறித்து ஆலங்குடி பேரூராட்சி தலைவர் மன்மோகன் வெளியிட்ட

செய்திக்குறிப்பு:தமிழக அரசு உத்தரவின் பேரிலும், மாவட்ட நிர்வாகத்தின் அறிவுறுத்தலின் பேரிலும் ஆலங்குடியில் கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி முகாம் இன்று முதல் 2 நாட்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன்படி, முதல் நாளான இன்று (8ம் தேதி) ஆலங்குடி படேல் நகர், ஆண்டிக்குளம், அம்பேத்கர் நகர் ஆகிய இடங்களில் கோமாரி நோய்த் தடுப்பூசி முகாம் நடைபெறும். இதில் கால்நடை மருத்துவர் திருவளர்ச்செல்வி தலைமையிலான குழுவினர் கால்நடைகளைப் பரிசோதித்து சிகிச்சை அளிப்பர்.இதைத் தொடர்ந்து நாளை (9ம் தேதி) ஆலங்குடி சந்தைப்பேட்டை, அண்ணாநகர், சிவன் கோவில் தெரு ஆகிய இடங்களில் கோமாரி நோய்த் தடுப்பூசி முகாம் நடைபெறும். எனவே, கால்நடை வளர்ப்போர், பால் மாடுகள் வைத்திருப்போர் மற்றும் விவசாயிகள் தங்களது கால்நடைகளை முகாமுக்கு கொண்டு வந்து மருத்துவம் செய்து கொள்ளலாம் என்றார்.

## <u>மகசூல் அதிகரிக்க மண் பரிசோதனை அவசியம் விஞ்ஞானிகள் வலியுறுத்தல்</u>

ஆலங்குடி, : புதுக் கோட்டை மாவட்டத்தில் மண் வளம் பெருக, மகசூல் அதிகரிக்க நேரடி நெல் விதைப்புக்கு மண் பரிசோதனை அவசியம் என்று புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அடுத்த வம்பன் வேளாண் அறிவியல் மையத்தில் நடைபெற்ற செயல் விளக்க முகாமில் வேளாண் விஞ்ஞானிகள் வலியுறுத்தியுள்ளனர்.புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அடுத்த வம்பனில் இயங்கி வரும் வேளாண் அறிவியல் மையத்தில் அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு நேரடி நெல் விதைப்புக்கான மண் மாதிரி எடுப்பது குறித்த செயல் விளக்க முகாம் நடைபெற்றது. இதில் பங்கேற்ற வேளாண் விஞ்ஞானிகள் மாரிமுத்து, கதிரவன், விஜயசங்கர் ஆகியோர் இதுகுறித்து செயல் விளக்கம் அளித்து பேசியதாவது:மனித வளத்துக்கு இயற்கை தந்த வரம் மண் ஆகும். எனவே, அரிய இந்த மண் வளத்தைப் பாதுகாப்பது நம் அனைவரின் கடமையாகும். குறுகிய காலத்தில் மண் வளத்தை புதுப்பிப்பது என்பது எளிதல்ல. பயிர்களுக்குத் தேவையான சத்துக்களைச் சேமித்து வைக்கும் அறையாக மண் திகழ்கிறது. நாம் பயிர் செய்யும் நிலத்தின் மண் வளத்தைப் பொருத்தே மகசூல் திறன் அமையும். பாசன முறைகளாலும், நீரின்

குறைபாடுகளாலும், முக்கியமாக மானாவாரி நிலங்களில் சீரான பயிரூட்ட சத்துக்கள் அடங்கிய உரம் இடாததாலும் உணவு தானிய உற்பத்தி குறைந்து வருகிறது.தற்போது தமிழகத்தின் உணவு உற்பத்தி 103 டன் என்பது போதுமானது அல்ல. எனவே, இம்மாவட்டத்தில் மண் வளம் பெருக, மகசூல் அதிகரிகரிக்க மண் பரிசோதனை செய்வது அவசியம். மண் பரிசோதனையின் அடிப்படையில் மண்ணில் உள்ள பயிர்ச் சத்துக்களின் அளவைக் கணித்து அதற்கேற்ற உரங்களையே பரிந்துரைக்க வேண்டும்.மண் மாதிரி மூலம் சேக ரித்த மண்ணை பிளாஸ்டிக் வாளியில் போட்டு நன்கு கலந்து கால் குறைப்பு முறையில் கிலோவாக குறைக்க வேண் டும். நெல், கேழ்வரகு, நிலக்கடலை, கம்பு மற்றும் சிறுதானியம் ஆகிய பயிர்களுக்கு 15 செ.மீ. ஆழத்திலும், பருத்தி, கரும்பு, வாழை, மரவள்ளி மற்றும் காய்கறிகளுக்கு 22 செ.மீ. ஆழத் திலும், நிரந்தர பயிர்கள், மற்றும் பழத்தோட்ட பயிர்களுக்கு முறையே 30 மற்றும் 90 செ.மீ. ஆழத்திலும் மூன்று மாதிரிகள் எடுக்க வேண்டும்.சேகரித்த மண்ணை நன்கு கலக்கி, சுத்தமான சாக்கு அல்லது பாலித்தீன் தாள்மீது பரப்பி. நான்காக பிரித்து, எதிர் முனைகளில் காணப்படும் இரண்டு பகுதிகளை நீக்கி விட வேண்டும். பின்பு மீதி உள்ள மண் மாதிரியை லு கிலோ அளவு வரும் வரை இம்முறையினை திரும்பத்திரும்ப செய்ய வேண்டும். சேகரித்த மண் மாதிரியை ஒரு சுத்தமான துணிப்பையில் போட்டு அதன் மீது மாதிரியைப் பற்றிய விவரங்களை குறிப்பிட்டு மண் ஆய்வகத்திற்கு அனுப்ப வேண்டும்.

உரம் மற்றும் பூச்சி மருந்துகள் வைக்கப்பட்டிருந்த சாக்கு களை அல்லது பைகளை மண் மாதிரிகள் சேகரிப் புக்கு உபயோகிக்கக் கூடாது.மண் மாதிரியின் மீது குறிப்பிட வேண்டிய விவரங்கள்: விவசாயின் பெயர், முகவரி, சர்வே எண், பயிரி ட்ட பயிர்கள், மண் பரிசோ தனை செய்வதால் கிடைக்கும் நன்மைகள்: மண்ணின் கார அமிலத்தன்மையின் அளவு, மண்ணில் உள்ள நீரில் கரையக்கூடிய உப்பின் அளவு மண்ணில் உள்ள பயிர்ச்சத்துகளின் அளவு, பயிர் சாகுபடிக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை மண்பரிசோதனை செய்வது மிக அவசியமானதாகும்.இதன் மூலம் மண்ணில் உள்ள குறைபாடுகளை கண்டறிந்து அதற்கு முறையான சீர்திருத்தம் செய்து, தேவையான பயிர்ச்சத்துக்களை இட்டு அதிக மகசூல் பெறலாம் என்றனர்.மண் மாதிரி சேகரிக்கும் முறைமண் மாதிரி

சேகரிக்கும் போது கவனிக்க வேண்டி யவை பரிசோதனைக்கு எடுக்கும் மண் அந்த நிலத்தின் மொத்த தன்மையை பிரதிபலிக்க வேண்டும்.

மண்மாதிரி எடுக்கும் பகுதி முழுவதையும் குறுக்கும் நெடுக்குமாக நடந்து அப்பகுதியில் காணப்படும் நிலச்சரிவு, நிறம், மண்நயம், மண்வளம், மேலாண்மை முறை, பயிர் சுழற்சி முறை ஆகிய தகவல்களை சேகரிக்க வேண்டும். வரப்பு, வாய்க்கால், எருக்குழி, மரத்தடி நிழல் கிணற்றுக்கு அருகில் மண் மாதிரி எடுத்தல் கூடாது. உரமிட்டவுடன் மண் மாதிரி எடுக்க கூடாது. குறைந்தது மூன்று மாத இடைவெளி தேவை. பயிர்கள் உள்ள நிலங்களில் மண் மாதிரிகள் எடுத்தல் கூடாது. பூஞ்சாண மற்றும் பூச்சிமருந்து இடப்பட்ட பகுதிகளிலிருந்து மண் மாதிரி எடுக்க கூடாது. மண் ஈரமாக இருக்கும்போது மண் மாதிரி சேகரிக்கக் கூடாது.மண் மாதிரி எடுக்கும் இடத்தில் மேற்பரப்பில் இருக்கும் இலை சருகு, புல், பூண்டு ஆகியவற்றை மேல் மண்ணை நீக்காமல் கையினால் அப்புறப்படுத்த வேண்டும். மண் மாதிரி எடுக்கும் பொழுது ஆங்கில எழுத்து ஏ வடிவத்தில் மண்வெட்டியால் இருபுறமும் வெட்டி அந்த மண்ணை நீக்கிவிட வேண்டும். பிறகு நிலத்தின் மேல் மட்ட பகுதியிலிருந்து அடிமட்டம் வரை அரை அங்குல கணத்திற்கு மண்ணை எடுக்க வேண்டும். இப்படியாக குறைந்து ஒரு எக்டருக்கு 10 முதல் 20 இடங்களில் மண் மாதிரிகள் சேகரிக்க வேண்டும்.

## <u>கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம்</u>

கொள்ளிடம், : கொள் ளிடம் அருகே மாதிரவேளூர் கிராமத்தில் நடந்த கோமாரிநோய் தடுப்பூசி முகாமில் 1,000 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது.நாகை மாவ ட்டம், கொள்ளிடம் அருகே உள்ள மாதிரவேளூர் கிராமத்தில், கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது. முகாமை ஊராட்சி மன்ற துணை தலைவர் கொளஞ்சியப்பன் துவக்கி வைத்தார். ஊராட்சி செயலாளர் முருகன் விவசாயிகள் காமராஜ், பன்னீர், அன்பழகன், செல்வராஜ் மற்றும் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். கிராம உதவியாளர் ராஜதுரை, தடுப்பூசி போட்டுக் கொண்ட கால் நடைகளின் உரிமையாளர்களிடம் மருத்துவ பரிசோதணை அடையாள அட்டைகளை வழங்கினார். கால்நடை மருத்துவக் குழுவினர்கள் தெய்வானை,

வேல்முருகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மாதிரவேளூர் கிராமத்தைச் சேர்ந்த கீழத்தெரு, மேலத்தெரு, படுகை, பட்டியமேடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 1000 கால்நடைகளுக்கு, வீடு வீடாகச் சென்று, கோமாரி தடுப்பூசி போட்டனர்.

## <u>தீபாவளிக்கு பிறகு நல்ல விலை</u>
## <u>குடோன்களில்?குவிக்கப்படும்?தேங்காய்</u>

கம்பம், : கம்பம் பகுதிகளில், அய்யப்பன் கோயில் சீசன், தீபவாளிக்கு பிறகு விலையேற்றத்தை எதிர்பார்த்து, குடோன்களில் தேங்காய்களை வியாபாரிகள் குவித்து வைத்துள்ளனர்.தேனிமாவட்டத்தில், கம்பம், கூடலூர், சின்னமனூர், உத்தமபாளையம், தேவாரம், உள்ளிட்ட ஊர்களை சுற்றிலும் அதிகமான தென்னந்தோப்புகள் உள்ளன. ஆனால், கடந்த 10 வருடத்துக்கு உள்ளாக, தென்னை விவசாயத்தில் ஏற்பட்டுள்ள நஷ்டம் காரணமாக, பெரும்பாலான விவசாயிகள் தென்னையை அழித்து, வீட்டடி மனைகளாக்கி விட்டனர். இதனால், இப்பகுதியில் தேங்காய் மகசூல் குறைந்து விட்டது. ஆண்டுதோறும் மார்ச் தொடங்கி ஆகஸ்ட் வரை உள்ள தேங்காய் வெட்டு சீசனில், அதிகமான தேங்காய் வரத்து இருக்கும். எல்லா தென்னந்தோப்புகளிலும் தேங்காய் வெட்டுவதில் விவசாயிகள் ஈடுபடுவார்கள். இப்பகுதியில் உள்ள தென்னந்தோப்புகளில் வெட்டப்படும் தேங்காய்கள், தமிழகத்தின் பிறபகுதிகளுக்கும், கர்நாடகா, கேரளா உள்ளிட்ட மாநிலங்களுக்கும் அனுப்பப்படும். ஆனால், தென்னைவிவசாயத்தில் ஏற்பட்டுள்ள பின்னடைவால், இப்போது தேங்காய் விலை உச்சத்தில் உள்ளது. உள்ளூரில் காய் ஒன்றுக்கு ரூ.12 முதல் 20 வரை விலைபோகிறது. ஒருகாலத்தில் ரூ.2 முதல் ரூ.5 வரை விலை போனது. இனி அடுத்தமாதம் விஜயதசமி, தீபாவளி, அய்யப்பன்கோயில் சீசன் என தேங்காய்க்கு தேவை அதிகரிக்கும். இதனால் கொப்பரைக்கு கூட வியாபாரிகள் தேங்காயை அனுப்பவில்லை. எல்லா குடோன்களிலும் தேங்காய் மலை, மலையாக இருப்பு வைக்கப்பட்டுள்ளது. அடுத்து வரும் அய்யப்பன்கோயில் சீசனில் அதிக விலையேற்றம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தேங்காய் வியாபாரிகள் குடோன்களில் குவித்து

வைத்துள்ளனர்.இதுகுறித்து தென்னை விவசாயிகள் கூறுகையில், ‘பல ஆண்டுகளுக்கு பிறகு தேங்காய்க்கு தற்போதுதான் அதிக விலை கிடைக்கிறது. இதனால், வியாபாரிகள் எங்களிடம் குறைந்த விலைக்கு வாங்கி, குடோன்களில் குவித்து வைத்துள்ளனர். தீபாவளிக்கு பிறகு தேங்காய்க்கு நல்ல விலை கிடைக்கும்’ என்றனர்.

## விதைகளை நேர்த்தி செய்தால் மகசூல் அதிகம் பெறலாம் வேளாண்மை துறை விளக்கம்

சிவகாசி, : பயிறு விதைகளை விதை நேர்த்தி செய்து விதைத்தால் நல்ல மகசூல் பெறலாம் என வேளாண் துறையினர் தெரிவித்துள்ளனர்.பருவ மழை பரவலாக பெய்துள்ளதால் விவசாயிகள் தற்போது விவசாய பணியில் தீவிரம் காட்டி வருகின்றனர். பயிறு சாகுபடி செய்யும் விவசாயிகள் பயறு விதைகளை கடினப்படுத்தி விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். விதைகளை கடினப்படுத்தி விதைப்பதால் விதை முளைப்புத் திறன் அதிகரிக்கும் ஒரே சீரான முளைப்பு திறன் கிடைக்கும். விதைகளை கடினப்படுத்த உளுந்து விதைகளை 100 பிபிஎம் துத்தநாக சல்பேட் கரைசலிலும், பாசிபயறு விதைகளை 100 பிபிஎம் மெக்னீசியம் சல்பேட் கரைசலிலும் 3 மணிநேரம் ஊற வைத்து பின்னர் ஈரப்பதம் வரும் வரை நிழலில் உலர்த்த வேண்டும். 1 கிலோ விதைக்கு 350 மி.லிட்டர் கரைசல் போதுமானது. (100மி.கிராம் உப்பை 1000 மி.லிட்டர் நீரில் கரைத்தால் 100 பிபிஎம் கரைசல் கிடைக்கும்) பின்பு விதைக்கும் போது 1 கிலோ விதைக்கு 4 கிராம் வீதம் டிரைக்கோ டெர்மாவிரிடி கலந்து விதைக்கவேண்டும். இவ்வாறு விதை நேர்த்தி செய்து விதைப்பதால் விதை மூலம் பரவும் நோய்கள் வராமல் தடுக்கலாம். 1 ஏக்கருக்கு 1 பாக்கெட் ரைசோபியம், ஒரு பாக்கெட் பாஸ்போபாக்டீரியா, உயர் உரங்களை 200 மி.லிட்டர் ஆறிய வடிகஞ்சியில் ஒரு ஏக்கருக்கு தேவையான விதையை கலந்து, நிழலில் உலர வைத்து விதைக்க வேண்டும். இவ்வாறு விதைப்பதால் காற்றில் உள்ள தழைச்சத்தும், பயிறுக்கு தேவையான மணி சத்தும் கிடைத்து பயிரின் வேர் வளர்ச்சி நன்றாக இருக்கும். வறட்சியை தாங்கி நன்கு வளரும். பயிறு விதைகளை விதைக்கம் போது விதை நேர்த்தி செய்து விதைத்து விவசாயிகள் அதிக

மகசூல் பெற்று பயனடையலாம். இவ்வாறு வேளாண் துறையினர் தெரிவித்துள்ளார்.

## தேசிய நதிநீர் இணைப்பு பணிகள் தீவிரம்

பண்ருட்டி, : பண்ருட்டி கங்கா காவேரி தேசிய நதிநீர் இணைப்பு இயக்க தலைவர் ஜெயபால் தமிழக முதல்வரின் தனிப்பிரிவிற்கு, தமிழகத்தில் நீர் ஆதாரத்தை பெருக்க மாநில நதிகளை இணைத் தல் மற்றும் நிலத்தடி நீர் உயர்வதற்கு தடுப்பணைகள் அமைப்பது அவசியம் குறித்து கோரிக்கை மனு அனுப்பி இருந்தார். இந்த மனுவை ஏற்று, பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் செல்வம் தகவல் அனுப்பி உள்ளார். அதில் தமிழகத்தில் உள்ள மாநில நதிகளை இணைப்பதற்கும் தடுப்பணைகள் கட்டுவதற்கும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, சாத்தியக்கூறுகள் உள்ள திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தாமிரபரணி ஆற்றை, கருமேணி ஆறு, நம்பி ஆற்றுடன் இணைப்பு திட்டம், காவிரி ஆற்றை மணிமுக்தாறு, வைகை மற்றும் குண்டாற்றுடன் இணைப்பு திட்டம், பெண்ணை ஆற்றினை பாலாற்றுடன் இணைப்பு திட்டம், காவிரி சரபங்கா இணைப்பு திட்டம் ஆகியவை நடவடிக்கை மற்றும் ஆய்வு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் 220 தடுப்பணைகள் ஆறுகளின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. இதைத்தவிர 24 தடுப்பணைகள் அமைப்பு பணி நடந்து வருகின்றன. சாத்திய கூறுகள் உள்ள இடங்களில் தடுப்பணைகள் அமைப்பதற்கான ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

## நம்பியான் வலசையில் உலக தென்னை தினவிழா

ராமநாதபுரம், : திருப்புல்லாணி வட்டாரம் நம்பியான்வலசை கிராமத்தில் வேளாண்துறை சார்பில் உலக தென்னை தினவிழா கொண்டாடப்பட்டது.வேளாண்மை உதவி இயக்குநர்(பொ) கீதாஞ்சலி, விவசாயிகளுக்கு தென்னங்கன்றுகள் வழங்கி, தென்னை வளர்ப்பு தொழில்நுட்பம் குறித்து எடுத்துரைத்தார். துணை வேளாண்மை அலுவலர் கணேசன் முன் னிலை வகித்தார். நிகழ்ச்சியில் நம்பியான்வலசை கிராமத்தை சேர்ந்த தென்னை விவசாயிகளும்,

தினைக்குளம், வண்ணாங் குண்டு, கொட்டியக்காரன்வலசை கிராமங்களைச் சேர்ந்த முன்னோடி விவசாயிகளும் கலந்து கொண் டனர். இவர்களுக்கு மானிய விலையில் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன. உரநிர்வாகம், நீர் நிர்வாகம், ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் தடுப்பு நிர்வாகம் குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. வேளாண் அலுவலர் சத்யவாணி நன்றி கூறினார்.